
சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி

31


மாசி 2023 ஆசிரியர்: மு.தயாளன் £4.00 / 100Rs



வளர்ந்த , வளரும் படைப்பாளிகளுக்கான களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்



மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
400Rs/£4




மு.தயாளன்
400Rs/£4



சு. ஆர்த்திகா
500Rs/£4

India 400 Rs
London £4
Can/Ame $10
Europe 10 Euro
மேற்குறிப்பிட்ட விலைகளிலிருந்து 20% கழிவில் பெறலாம்

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை luxmi2128@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்

*எனது எல்லாப்புத்தகங்களும் சிறுகதை மஞ்சரிகளும்*
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

**இது வரை எந்தப் புத்தகமும் வெளியிடாது முதல் புத்தகம் வெளியிடவிரும்பும் இளம் எழுத்தாளர்கள் (சிறுகதை, நாவல்) விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.** luxmi2128@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களுக்கான இலக்கியங்கள்...

எவரை எடுத்தாலும் மக்களுக்காக எழுதுவதாகவே குறிப்பிடுகிறார்கள். இது ஒரு தாரக மந்திரமாகவே இன்று எழுத்தாளர்கள் மத்தியில் உலாவுகிறது. மக்களுக்கான எழுத்து எது? என்பது குறித்த மயக்கமாக இருக்கலாம் அல்லது புரிந்து கொள்ளாமையாகவும் இருக்கலாம்.

ஒரு அரசு மக்களுக்கு பாண் தேவையா? சிகரெட் தேவையா? என்று வரும்போது எதை தேர்வு செய்வது என்ற பிரச்சினை அரசுக்கு ஏற்படுகிறது. முதலாளித்துவ அரசாக இருந்தால் சிகரட்டையும் சோசலிச அரசாக இருந்தால் பாணையும் தெரிவு செய்யும் என்பது சித்தாந்தம். முதலாளித்துவ அரச சித்தாந்தம் லாபத்தை நோக்காகவும் சோசலிச அரசாங்கம் மக்களுக்கு எது அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது என்பதையும் கருத்திற் கொள்ளும்.

இதே பிரச்சினைதான் இலக்கியத்திலும் இலக்கிய விமர்சனங்களிலும் கையாளப்படவேண்டும் என்று நினைக்கிறேன். மக்களுக்கு எது அத்தியாவசியமாகத் தேவை என்பதைக் கருத்திற்கொண்டு எழுத்தாளன் தன் படைப்புகளுக்கான கதைகளைத் தேடல் வேண்டும் என்பதே சரியானதாக இருக்க முடியும். இதனால் நீங்கள் இதைத்தவிர வேறெதையும் எழுதக் கூடாது என்பதல்ல என் கருத்து. நீங்கள் எழுதுகின்ற எல்லாவற்றிற்கும் மக்கள் இலக்கியம் என்ற பெயரைச் சூட்ட வேண்டாமென்றே கேட்கிறேன். எதையும் எழுதுங்கள் அது உங்கள் தனிப்பட்ட உரிமை.

மக்களுக்கான இலக்கியம் எப்போதும் அவர்களின் அடிப்படைத்தேவைகளிலிருந்துதான் தொடங்குகிறது. இந்தத் தேடலின்போதுதான் மக்கள் இலக்கியம் உருவாகும். அவர்களின் தேவைகளில் ஏற்படும் இடர் அதற்கான தீர்வுக்கான வழிகாட்டல் ஆகியவைதான் ஒரு படைப்பை மக்கள் இலக்கியமாக மலர வைக்கும்.

**மு. தயாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்...


1 மக்களுக்கான இலக்கியங்கள்

2 உள்ளடக்கம்

3 அத்தி பூக்குமா ?
ரஜிதா அரிச்சந்திரன்

6 பறையொலி
அலெக்ஸ் பரந்தாமன்

13 உணர்வுகள்
திருமலையாள்

17 கரும்பலகை - தொடர்கதை
மு.தயாளன்

20 அந்த ஒருநாள்
கமலினி கதிர்

24 கழுமரந் தேடும்...
தீபதிலகை

31 கொன்றது கொரோனா
சம்பூர் சமரன்

37 இதுதான் நட்பா
அஷ்வினி வையந்தி

39 மஞ்சரி 30 ஒரு பார்வை
பேராசிரியர் செ. யோகராசா

40 சிறுகதை எழுதுவதெப்படி?
மு. தயாளன்


**விநியோகம்:**

யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் ,
+94 773788795

மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின்
+94 774338878

திருகோணமலை: த. சரண்யா, +94765554649

## அன்பான வேண்டுகோள்.

*நீங்கள் படைப்புகளை அனுப்பும்போது உங்களின் முகவரி, படம், வங்கிவிபரம் உங்கள் இலக்கியப் பிரவேசம் சம்பந்தமான குறிப்பு ஆகியவற்றை அனுப்பி வைக்கவும். ஆ-ர்*

**சிறுகதை மஞ்சரி 30 இன் சிறந்த இரு சிறுகதைகள்**

1. கைவரிசை- ஷெல்லிதாசன்
2. யாவும் கற்பனையல்ல - செங்கதிரோன்


**நன்றிக்குரியவர்கள்:**

திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர்,

**அட்டை வடிவமைப்பு:** ந. ரமணன்

**அட்டைப்படம் :** Drawing : kailasanathan
Painting: Shawmia kanesh

**ஓவியர்கள்:** G. கைலாசநாதன்

**முதன்மை ஆசிரியர்**

மு. தயாளன்

**உதவி ஆசிரியர்கள்**

வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்

**ஒப்பு நோக்காளர்கள்:**

திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்

**ஆலோசகர்கள்**

Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா

**தொடர்பு முகவரி:**

**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811

**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649

**சந்தா விபரம்:**

**Srilanka:**900Rs/Year
Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817

**England** £20/Year **Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120


Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307
SWIFTBIC BUKBGB22





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தி பூக்குமா?



கலாசார உத்தியோகத்தராக இருக்கும் இவர் நாட்டினுடைய மக்களின் பிரச்சினைகளை கலைக்கண் கொண்டு பார்ப்பதனால் படைப்புகளும் அவ்வாறு அமைகின்றன. இவருடைய முதல் சிறுகதை, சிறுகதை மஞ்சரியிலேயே வெளிவந்தது. கவிதையில் நாட்டம் கொண்ட இவர் சிறுகதைக் களத்திலும் தன் பாதங்களை அழுத்தமாகப் பதிக்க முயல்கிறார். விரைவில் இவரின் சிறுகதைகளைத் தாங்கி ஒரு நூல் வெளிவரவுள்ளது.



**கவிஞர். ரஜிதா.அரிச்சந்திரன்**

அட நாடு போற போக்கில் நரி உழுந்து வடைக்கு அலையுதாம் என்று புலம்பிக் கொண்டிருந்த சிங்கரைப் பார்த்து

"என்ன ஐயா நீங்கள் புறுபுறுக்கிறியள்?"

"இல்லையட முனியன் எங்கட யாழ்ப்பாணம் இருந்த நிலையை நீ அறிவாய் தானே இன்றைக்குப்பார். கோட்டை மறைவிலையும் கடல் விளிம்பிலும் பஸ்சுக் குள்ளும் செய்யாத தப்பு ஒன்றுமே இல்லை. ஏன் எங்கட சமுதாயத்திற்கு என்னாச்சு ஏன் இந்த நிலை?" என்று அழுத அவரைப்பார்த்து முனியன்

"என்ன செய்ய சமூகத்தில் அக்கறை உள்ள பலரும் இப்படித்தான் இருக்கிறார் கள். சில சமூக அக்கறை கெட்டவர்களால் இப்படி ஆகிறது. என்ன சாபக்கேடோ தெரியவில்லை அண்ணை இப்படித்தான் அண்டைக்கு நான் யாழ் நகருக்கு சென்று கொண்டிருக்கையில் என் முன்னால் மூன்று காவாலிகள் தலையில் மஞ்சள் கலரும் பூசி பச்சை தூசணவார்த்தையால பேசிக் கொண்டு போனாங்கள். எந்த மரியாதையும் இல்லாமல் இப்படியா நாம இருந்தோம்."

"என்ன இரண்டுபேரும் ஒரே கதையாய் இருக்குது" என்று கூறிக் கொண்டே வந்த வாத்தியாரிடம்,

"வாத்தியாரையா நாங்கள் சமூகத்தை பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்." என்றவர்களைப் பார்த்து வாத்தியார் விழுந்து விழுந்து சிரித்தார். "என்னையா நாங்கள் என்ன சொல்றம் நீரோ விழுந்து விழுந்து சிரித்து எரிச்சலைக் கிளப்புறீர்."

"பின்னை என்ன தறிகெட்டு ஓடிக் கொண்டே இருக்கும் சமுதாயம் நீங்கள் இருவரும் பேசுவதைக் கேட்கவா போகுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவாளம் போட கூடியவர்களையும் அழித்துப் போட்டாங்கள் அன்றைக்கு கலாச்சார சீரழிவான செயல்களுக்குக் கொடுத்த தண்டனையை நீர் அறியவில்லையே. மொட்டைப் போஸ்ரில் சுட்டுத் தொங்கவிட்டாங்கள். அப்ப எல்லாம் சரியாத்தானே இருந்தது. அத விடும் ஐயா வேலியைப் பயிரே மேய்வது போலத்தான் இன்றைக்கு நடக்குது. என்ன போதை மருந்தை ஊருக்குள்ள நூறு கிராம், இருநூறு கிராம் என்று பிடிக்கிறாங்கள். ஊருக்குள்ள வாற வழியில நிப்பாட்ட ஏலாதோ. இந்து சமுத்திரத்தின் நித்திலத்தைச் சுற்றி காவல் இல்லையோ? ஏணையா நாங்கள் இன்று கேட்க முடியாத நிலையில் இருக்கிறம். கண் இருந்தும் குருடராய் காதிருந்தும் செவிடராய் இருக்கிறோமே. எங்கட பெடி பெட்டையள போதை மருந்துக்கு ஆளாகி எங்க விழுமியத்தை சீரழிக்கப் போறாங்கள். விழித்தெழுந்தால் மட்டுமே இதைத் தடுக்க முடியும்.

அண்ணை நாங்கள் ஒரு குழுவினை உருவாக்கிப் பிரச்சாரம் செய்யலாம் வாங்கோ ஊருக்கை போவோம்" என்று கூறிய வாத்தியாரைத் தொடர்ந்து போனார்கள். வாத்தியார் ஒரு பறையினை எடுத்து அடித்தார். அடித்த சத்தத்தில எல்லாரும் கூடினார்கள். அப்போ அவர்

"அன்புள்ள சகோதரர்களே சகோதரிகளே எங்கள் சமூகத்தினை நாங்கள் தான் காக்கணும். போதைக்கும் கலாசார சீரழிவுக்கும் எதிராக குரல் கொடுப்போம் வாருங்கள்" என்றவரை

"ஐயா" என்ற குரல் வந்த திசையை நோக்கிய வாத்தியார், "வா அம்மா நீ தான் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் வந்தாய். எங்கட சமூகத்தை திருத்த" என்றதும்,

"அந்தப் பணியாரம் ஒன்றும் இல்லை எங்கள நிம்மதியாக இருக்க விடப் போறீரா இல்லையா? போன மாசம் போதை எனும் சாத்தானால் பீடிக்கப்பட்ட இளைஞர்களை திருத்தப் போறன் என்று கிளம்பிய பாதரை அடித்துப் போட்டதையும் அந்தப் பாதர் சாவைப் பார்த்து திரும்பியதையும் நீர் அறியமாட்டீரோ? நாங்கள் குழந்தை குஞ்சுகளுடன் சந்தோசமாக வாழ உமக்கு பிடிக்கலயோ? என்ரை வீட்டை மட்டும் தான் எனக்குப் பொறுப்பு. வேறவேலை இல்லாட்டா பொத்திக் கொண்டே இருங்கோ" என்றவளுடன் நின்றவர்களும் "ஆமா சரோ சொல்றது தான் சரி எங்களுக்கு இந்த வேண்டாத வேலை ஒன்றுமே வேண்டாம்" என கோசம் போட்டனர்.

வாத்தியார் "தயவுசெய்து நான் சொல்றதைக் கேளுங்கள். எங்கட சமூகத்தைப் பாதுகாக்கவேணும் வாங்கோ, சமூக விழிப்புணர்வு பெற வைப்போம்" என்றதும்,

"வாங்கோ எல்லோரும் போவோம் இந்த மனுசனுக்கு புத்தி கெட்டுப் போச்சு எங்களுக்கு ஏன் வீண் பிரச்சனை. இவர வைக்கோற்ப் போரைப் பார்த்துக் கத்தும் நாய் போல குரைக்கட்டும்" என்று கூறி அகன்றனர் எல்லோரும்.

"ஐயோ என்னதான் நல்லதை செய்ய கிளம்பினாலும் இது தான் நடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்தியளே. என்ன சிங்கன், முனியன் இப்ப போதுமா? பைத்தியக்காரப் பட்டம்தான் மிச்சம். தங்களை உணரா மூடர் உள்ள வரை போதை வியாபாரிக்கு நல்ல வியாபாரம்தான். இந்த முட்டாள் சனம் தங்கட வீட்டுக்குள்ள வரும்வரை வேடிக்கை தான் பார்க்கும் பிறகென்ன ஒரேயடியாக அழிய வேண்டியது தான். தமிழன் அழிவதற்கு அவனது சுயநலம் மட்டுமேதான் காரணம்." என்று கூறிய வாத்தியாருக்கு வாருங்கள் வாத்தியார் போவோம் என கூறிச் சென்றனர். கையறு நிலையில் சென்றது அவர்கள் மூவரும் அல்ல அத்தனை சமூகத்திலும் வாழும் நலன் விரும்பிகளுக்கும் இதுதான் நிலை. சமூகப் பொறுப்பற்ற நிலையை மாற்ற ஏதும் அதிசயம் நடந்தாதான் உண்டு. அது அத்தி பூத்தாற் போலத்தான்.

# நான் நீ அது இது

நான் நீ அது இது என்று எதிரும் புதிருமாகப் பிரித்து வைத்து இருப்பவருக்கு இது புரியாது. தன்னைக் காணாமல் போக்கியவருக்கு எல்லாமும் தானென்று புரியும். இங்கேயிருந்து எதிர்ப்பக்கம் பார்ப்பதுபோல எதிர்ப் பக்கத்திலிருந்தும் தன்னைப் பார்க்க முடியும் . எல்லாப் பக்கத்திலிருந்தும் தன்னை அவதானிக்க முடியும். அப்படிப் பார்க்கிறபோது தான் எந்தவிதத்திலும் முக்கியமில்லை. இருப்பு என்பது இந்த உடலல்ல. தான் என்பது ஆத்மா. அது எதிலும் நிறைந்திருக்கிறது. எல்லாமுமாக இருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாக பரம சத்தியமாகத் தெரியும். அப்படித் தெரிய வருகிறபோது ஏற்படுகிற தனிமை, ஒரு குழந்தைத்தனமான மிரட்சியைக் கொடுக்கும். எப்போதும் வாய் பிளந்து கிடக்கும் குருவியைப்போல கட்டுத் தறிக்குக் கட்டுப்பட்டுத் தலை குனிந்திருக்கும் எருதுபோல கடும் வெயிலில் சிறிய மர நிழலில் தூங்குகிற சிங்கம் போல மலை இடுக்கில் ஈரம் படர்ந்த இடத்தில் சுருண்டு அசையாது கிடக்கிற பாம்பைப்போல மனம் பேரமைதியுடன் காணப்படும். இப்படி மாறிய மனம் என்ன பாடம் படிக்கும்? ஆரவாரமான இந்த உலகுக்கு நடுவே நின்று ஆரவாரமும் இல்லாமல் அமைதியாக தனக்குள்ளே தான் மூழ்கிக்கிடப்பது என்பது ஒருவித அவஸ்தை.

பாலகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எட தம்பி! நான் சொல்லுறதைக் கேளடா. இவ்வளவு காலமும் நாங்கள் தானே மாரியம்மனுக்குப் பறை அடிச்சனாங்கள். இப்ப திடீரெண்டு நீ உப்பிடிப் புதுக்கோலம் கொண்டு நிற்கிறது எனக்கு நல்லதாகப் படேல்லை. நாளைக்குப் பொங்கல். காலமை வெளிக்கிடுகிறதுக்கு ஆயத்தமாக இரு..." நல்லான் கூறி முடித்துவிட்டு, தனது மகன் சரவணனைக் கேள்விக்குறியோடு நோக்கினார். குடிசையின் வெளித்திண்ணையில் அமர்ந்திருந்தபடி... தனது தொலைபேசியில் எதையோ நோண்டிக் கொண்டிருந்த சரவணனுக்கு தந்தையின் வேண்டுதல் மிகமிக எரிச்சலைக் கொடுத்தது.

" நான் சொன்னது சொன்னதுதான். கோயில்காரர் எங்களையும் ஒரு மனிசராக மதிச்சு, நாலுபேருக்கு முன்னாலை எங்களுக்குரிய கௌரவத்தைத் தந்திருப்பார்களானால், இந்தப் பறையடிக்கிற தொழிலை நான் முன்னெடுக்க விரும்பியிருப்பன். இந்தப் பறையை அடிக்கிறதாலைதானே, நாங்கள் பறையர்... சாதியில குறைஞ்சவரெண்டு ஒதுக்கப்பட்டு இருக்கிறம். கோயில் பொங்கல், திருவிழாக்களிலை, இழவு வீடுகளிலை எங்களை மனிசரா மதிக்காத இடத்திலை நாங்கள் எதுக்காகப் போய் பறையடிக்க வேணும்...?" மகனின் கேள்விக்கு நல்லானால் பதிலளிக்க முடியவில்லை. அவன்முன் மௌனமாக நின்றார்.

" அவையள் கேட்டவுடனை எதுவித மறுப்புமில்லாமல், தாற காசை வாங்கிக் கொண்டு, பொங்கலுக்கு வெளிவீதியில பரவின பிரசாதப்படையல்களையும் எடுத்துக் கொண்டு நீங்கள் வந்த காலம் இல்லை இப்ப. நாடு எவ்வளவோ முன்

# பறையொலி

வன்னிப் பிரதேசத்தில்
வாழும் அலெக்ஸ் பரந்தாமன்
நாடறிந்த எழுத்தாளர். மக்கள்
பிரச்சினைகளை லாவகமாக
எடுத்தாளுவதில் வல்லவர்.
இது வரை இரு சிறுகதைத்
தொகுப்புகளும் கவிதைத்
தொகுப்பும் வெளியிட்டுள்ளார்.
பத்திரிகைத் துறையில்
நீண்டகாலம் பணிபுரிந்த
இவர் எழுத்துலகத்துள்
தன்னை முழுமையாக
அமிழ்த்தியுள்ளார். மிக
விரைவில் அவரது சிறுகதைத்
தொகுப்பு ஒன்று இலக்சுமி
பிரசுரமாக வெளிவரவுள்ளது.
இத் தொகுப்பில் வரும் கதைகள்
யாவும் சிறுகதை மஞ்சரியில்
பிரசுரமானவை என்பது
குறிப்பிடத்தக்கதாகும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேறியிட்டுது. நாங்களும் நாலு மனி சரைப்போல முன்னேறப் பார்க்க வேணும். விரும்பினால் கோயில்காரர் வீட்டை வரட்டும். நான் கதைக்கிறன்..." சரவணன் கூறிக்கொண்டிருக்கையில், தெருப்படலையருகில் நல்லானை யாரோ அழைக்கும் குரல் கேட்டது. நல்லான் தெருப்படலையை நோக்கி நகர, மகன் சரவணன் அவரைத் தடுத்தான்.

"ஆரது...?"

"நல்லான் நிக்குதோ.. ?"

சரவணனுக்கு ஒருகணம் சுருக் கென்றது. தனது தந்தையை அஃறிணை மொழியில் அழைத்ததையிட்டு, அவ னுக்குச் சினம் பொங்கியது சிரசுவரை.

"அவர் நிற்கிறார். படலை திறந்துதான் கிடக்குது. உள்ளை வரலாம்..."

சில விநாடிகளின்பின்... மீண்டும் அதே குரல்...

"நல்லான்... நல்லான்..."

சரவணன் எழுந்து படலையடிக்குப் போனான். அவனுக்குப் பின்பாக நல்லா னும் நகர்ந்தார்.

படலைக்கு வெளியே அம்மன் ஆலய தர்மகர்த்தாசபை உறுப்பினர் ஒருவர் நிற்பது தெரிந்தது. சரவணனுக்கு விளங்கி விட்டது.

"நாளைக்கு, கோயிலில் பொங்கல் நிகழ்வு. பறையடிப்பதற்குச் சொல்ல வந்திருக்கிறன்."

"என்ன விசயம்..." சரவணன் கேட் டான்.

"நல்லான் எங்கை...?"

நல்லான் சரவணனுக்கு முன்பாக வந்து நின்றார்.

" என்ன நல்லான்... நாளைக்குப் பொங்கலல்லோ! தெரியாதோ? நாங்கள் வந்து சொல்ல வேணுமோ.. ?"

" அவர் இனி வரமாட்டார்...?"

சரவணன் கூறியதைக்கேட்டு, தர்மகர்த்தா சபை உறுப்பினர் ஒருகணம் திகைத்து விட்டார்.

"இனி நாங்கள்தான் வருவம். அவர் வரமாட்டார். நாங்கள் வருவதாக இருந் தால், எங்களுக்குரிய மரியாதையை முதல்ல நீங்கள் தரவேணும். மேளங்க ளைச் சைக்கிள் கரியரிலை வைச்சுக் கட்டிக்கொண்டு, தெருவெல்லாம் வர முடியாது. ஆட்டோ அனுப்ப வேணும். ஆட்டோவுக்கான செலவையும் கோயில் நிர்வாகம்தான் குடுக்கவேணும். இவ்வ ளவு காலமும் பறை அடிப்புக்கான கூலிப் பணம் மூவாயிரம் ரூபா. அது இனி ஐயா யிரம் ரூபா. நாங்கள் தேவையெண்டால் முழுப்பணத்தையும் தந்துபோட்டு, நாளைக்குக் காலமை ஆட்டோவை அனுப்பலாம்."

"என்ன நீ... இப்ப புதுசா சட்ட திட்டங்கள் கதைக்கிறாய்...?" வந்தவர் மீண்டும் வார்த்தைகளை உச்சரிக்க முன்பு, சரவணன் தன் தெருவோரப் படலைத் தட்டியைச் சாத்திவிட்டு, தந்தையையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்று விட்டான்.

அம்மன் கோவில் வசந்த மண்ட பத்துக்கு முன்பாக, தர்மகர்த்தா சபைக் குழுவினர் அனைவரும் குழுமியிருந்தனர். நல்லானின் மகன் விடுத்த வேண்டுதலை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.


'இவ்வளவு காலமும் சொன்ன சொல் மீறாமல் சேவகம் செய்த பறையர் சமூக வழித்தோன்றலிலிருந்து, இப்படியொரு புது விருட்சமா? காலமாற்றம் இந்தப் பறையர் சமூகத்தையும் சிந்திக்க வைத்து விட்டதா? பொங்கல்நேரம் பறை ஒலிக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால், பூசாரிக்கு உரு ஏறாதே? என்ன செய்வது... ?'

சபைக்குழுவினர் ஆளாளுக்கு ஆலோ



சனை சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடையே எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை. சுமார் ஒரு மணித்தியால வாக்குவாதப் போராட்டத்தின் பின்பு, ஆட்டோவை அனுப்பி அவர்கள் கேட்ட பணத்தையும் கொடுத்து, வரவழைப்பதென முடிவு எடுக்கப்பட்டது.

மறுநாள் காலை எட்டுமணியளவில் நல்லான் வீட்டிற்கு முன்பாக ஆட்டோ வாகனம் வந்து நிற்பதைக் கண்டு, நல்லான் ஆச்சரியப்பட்டுப் போனார். ஆட்டோ வீடு தேடி வந்ததில், மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது அவருக்கு.

சரவணன் ஏற்கனவே குளித்துவிட்டு ஆசாரமாக இருந்தான். ஆட்டோ சாரதி கொடுத்த ஐயாயிரம்ரூபா பணத்தை வாங்கித் தந்தையிடம் கொடுத்துவிட்டு, குடிசை அறைக்குள் சுவாமிப்படங்கள் வைத்திருக்கும் இடத்திற்குப் போனான். குடிசையின் பின்தாழ்வாரத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த சிறியதும் பெரியதுமான இரண்டு பறைமேளங்களையும் நல்லான் குடிசையின் முன்பகுதிக்குக் கொண்டுவந்து முற்றத்தில் வைத்தார்.

சுவாமிப்படங்களுக்கு முன்னால் நின்ற சரவணன், அந்த இடத்தைவிட்டு நகர்ந்து முன்பக்கத்துக்கு வந்தான். சரவணனைக் கண்ட நல்லான் திகைத்துப் போனார். கூடவே அவனோடு உடன் பிறந்த தம்பியும்!

சிவதீட்சை பெற்றவர்கள் போன்று சரவணனின் உடலில் அந்தந்த இடங்களில் திரிபுண்டரங்கள் காணப்பட்டன. கழுத்திலிருந்து நெஞ்சளவுக்கு உருத்திராட்சமாலை தொங்கிக் கொண்டிருந்தது. சந்தன நிறத்திலான அகலக்கரை வேட்டியை அணிந்திருந்தான். இடுப்பில் சாம்பல் நிறத்தில் ஒரு சால்வை. நெற்றியில் உள்ள திரிபுண்டரத்துக்கு கீழே ஓர் அங்குல வடிவத்தில் மெலிதான ஒரு சந்தனக் கீறு. அதன் நடுவில் சிறியதொரு வடிவத்தில் குங்குமப்பொட்டு. மீசை மழிக்கப்பட்ட முகம். மொத்தத்தில் அவனது முகவடிவம் அசல் தவில்மேளம் அடிப்பவர்களைப்போன்று காட்சியளித்தது.

"என்னடா இதெல்லாம்...?" தந்தை விபரம் அறியும் ஆவலில் கேட்டார்.

"இனிமேல் நாங்கள் பறையர் சமூகமல்ல. உயர்சாதிக்காரர்களில் ஒருவர். இன்று அம்மன் வாசலில் இருந்து ஒரு புதிய கதையை ஆரம்பிக்கப் போறேன்.

கோயில்காரர் பொங்கலுக்கு எங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைத் தேடிவரும் போதெல்லாம் எனது தோற்றமும் இனி இப்படித்தான் மாற்றம் கொள்ளும்..."

சிரித்த முகத்தோடு தந்தைக்குக் கூறிவிட்டு, மேளங்களை ஆட்டோவில் ஏற்றினான். கூடவே, தனது தம்பியையும் அழைத்துக் கொண்டான். ஆட்டோ ஓடிக்கொண்டிருந்தது அம்மன் கோவிலை நோக்கி.

வருடாந்தக் குளிர்த்தீ என்பதால், கோவில் மண்டபத்துள் மக்கள் நிறைந்து காணப்பட்டார்கள். பொழுது நடுப்பக லாகிக் கொண்டிருந்தது. அம்பாளுக்கு அபிஷேக ஆராதனை ஆரம்பிக்கும் நேரம், சரவணன் பெரிய மேளத்தைத் தூக்கிக்கொண்டான். அவனது தம்பி சிறியமேளத்தின் நார்ப்பட்டியை கழுத் திலே கொளுவிக்கொண்டான்.

டண்டாண் டண்டாண்... டாங்கு டுக் குடு... டுக் குடு குடு குடு... டுக்குடுகுடுகுடு...

ஒலிக்கத் தொடங்கியது பறை. அந்த ஒலி ஆலய அயலிலெங்கும் ஓர் அதிர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. வழக்கமாக நல்லானும் அவரது மைத்துனரும் அடிக் கும்போது, ஏற்படும் ஒலிகளுக்கு மாறாக இருந்தது சரவணனின் மேள வாசிப்பு. சபைக்குழுவினர் அதை அவதானிக்கத் தவறவில்லை. அதைவிட, சரவணனின் தோற்றம் உயர்சாதியினரைப்போன்று பூச்சுப்புணக்குகளால் அமைந்திருந்ததைக் கண்டு, சபையினரின் கண்களை உறுத் தவே செய்தது. "பறையரும் இப்ப எழும் பியிட்டினம்..." சபை உறுப்பினன் ஒருவன் கூறிக் கொள்கிறான்.

முன்னைய காலங்களில், நல்லானும் அவரது மைத்துனரும் பொங்கலுக்குப் பறை அடிக்க வரும்நாள்களில் அவர்களது புறத்தோற்றம் ஏழ்மைநிலையினை வெளிப்படுத்துவதாகவே இருக்கும். முகங்களில் ரோமங்கள் வளர்ந்த நிலை யில், மழிக்கப்படாத முகங்களோடு வாய்க்குள் வெற்றிலையைக் குதப்பியபடி, அவர்கள் வந்து நிற்பார்கள். சாயம் நீங்கிய பியாமாச்சாரமும் மிகவும் நைந்துபோன பொத்தல்கள் தைக்கப்பட்ட அரைக்கை பெனியன்களையும் அணிந்திருப்பார்கள். பூசாரியின் உச்சக்கலை ஆட்டத்திற்கு முன்பாக அவர்களால் ஈடுகொடுத்து அடிக்க முடியாமல் திணறுவார்கள். ஆனால், இன்று அத்தனைக்கும் எதிர் மாறான நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன அம்மன் சன்னிதானத் துக்கு முன்பாக!

பகல்பொழுது மறைந்து... மாலையாகி இரவும் வந்துவிட்டது. பொங்கலுக்கான ஆரம்ப நிகழ்வாக 'வளந்து' எடுக்கும் நிகழ்வு நடைபெறத் தொடங்கியது. சரவணன் இயங்கத் தொடங்கினான். அவனோடு அவனது தம்பியும்.

டண்டண்டண்டண்... டாங்கு டுக்கு டுக்கு... டாங்கு டுக்கு டுக்கு...

சரவணனின் இரு கரங்களிலுமுள்ள குச்சிகள் வெறிபிடித்தனவாக மேளத்தின் தோல்பரப்பை அதிரவைத்துக் கொண் டிருந்தன. அதேவேளை, அவனது பார்வை கலையாடும் பூசாரிமீது நிலை குத்தியபடி... தனது லாவகமான அடிகளால் அவருக்குள் உருவேற்றிக் கொண்டிருந்தான்.

நாங்கள் பறையர்... கீழ்சாதியினர்... வறுமைப்பட்டவர்கள்... பழக்கவழக்கம் தெரியாதவர்கள்... என்ற உங்களுடைய மேட்டிமைக் கணிப்புக்கு, நான் கொடுக் கிற அடிகள் இதுதான். முடிந்தால் இன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைக்கு நான் அடிக்கிற அடியளுக்கு நீ ஆடு பார்க்கலாம்.. என்ற எண்ணங்களை முகத்தில் பிரதிபலித்தபடி... பூசாரியை உற்றுப்பார்த்தபடி... மேளமும் அவனது அடிகளை வாங்கியபடி... அம்மனைக் கும்பிட வந்தவர்கள் அப்படியே அசையாது தங்களை மறந்தவர்களாய் சிலையென இருந்தபடி... நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

மூலஸ்தான வெளிவாசலுக்கு முன்பாக சன நெருக்கத்துக்கு மத்தியில், ஆக்கிரோஷமாக இயங்கிக் கொண்டிருந்த சரவணனுக்கு, தனது முதுகில் யாரோ பலமாகத் தட்டுவது தெரிந்தது. திரும்பிப் பார்த்தான். தர்மகர்த்தா சபையில் உள்ள ஒருவன், இன்னும் நன்றாக அடிக்கும்படி... கண்களால் சைகை செய்ததும், சரவணன் தனது அடிகளைப் பட்டென நிறுத்தினான். பறையொலி நின்றதும், பூசாரியும் உருக்கொண்டு ஆடும் கலையில் இருந்து நிலை தடுமாறிக் கீழே விழுந்து கொண்டார்.

சரவணன் தனது தோளில் கிடந்த மேளநார்ப்பட்டியை திடீரெனக் கழற்றினான். தனது முதுகில் தட்டியவனிடம், மேள நார்ப்பட்டியை நீட்டியபடி... " இந்தாடா... பிடி. நீயே அடி..." என்று கூறியதும், அதற்கு என்ன காரணம் என்பதை அருகில் நின்ற ஒரு சிலரைத்தவிர ஏனையோருக்குப் புரிபடவில்லை. சபையின் செயலாளர் இதனைக் கவனித்திருக்க வேண்டும். சரவணனின் முதுகில் தட்டியவரைப் பார்த்து, கோவிலுக்குள் பெண்கள் இருப்பதையும் நோக்காது, இரண்டு கெட்ட வார்த்தைகளோடு அவனை அர்ச்சனை செய்து வெளியே அனுப்பி விட்டார்.

சரவணனுக்கு மீண்டும்... முதலில் இருந்து தொடங்க வேண்டியதாயிற்று. உள்ளே மனம் குமையத் தொடங்கியது. தனது சமூகத்தை இந்த உயர்சாதி தர்மகர்த்தா சபையினர் எப்படியான தகுதி நிலையில் வைத்திருக்கிறார்கள்.. என்பதைப் புரிந்து கொண்டதும், அவனது மேளம் அவனிடமிருந்து அடி வாங்கத் தொடங்கியது.

பூசாரியால் இயங்க முடியவில்லை. ஏதோ ஒரு ஒப்புதலுக்கு அவர் ஆடிக் கொண்டிருந்தார். சரவணனது முகத்தில் மெலிதான ஒரு கேலிப் புன்னகை! அவன் விடவில்லை. மேளத்தில் பலமாக அடிக்கத் தொடங்கினான். விநாடிகள் நகர... நகர... அவனது அடிகள் ஒவ்வொன்றும் உக்ரம் பெறத் தொடங்கின. பூசாரியிடமிருந்து எந்தவொரு உத்வேகமும் காணப்படவில்லை. பூசாரியாரில் தெரிந்த மாற்றத்தைக்கண்டு, சபைக் குழுவினர் மிகுந்த குழப்பத்துக்குள்ளாகி நின்றனர்.

இருந்தாற்போல் குழுமியிருந்த சனங்களிடையே சிறியதொரு சலசலப்பு! எல்லோர் வாய்களிலிருந்தும் " அரோகரா... " ஒலிகள்! சரவணன் சற்று திரும்பிப் பார்த்தான். அவனுக்குப் பகீர் என்றது. அவன் பின்பாக, அவனது தந்தை நல்லான். அவரது உடல் லேசாக உதறியபடி இருந்தது. அவன் திரும்பி பூசாரியைப் பார்த்தான். அவரால் இனி தனது மேள அடிகளுக்குஇயங்க முடியாது என்பதையும், அவரது உடலசைவு மெல்லத் தணிந்திருப்பதையும் கண்டான்.

சரவணன் மேளத்தோடு தன் தந்தையின் பக்கம் திரும்பினான். சிறு வயதில் இருந்தே கோவில்களில் தந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையுடன் இணைந்து பறை அடிக்கும் போது, உடலுக்குள் கலையை இறக்கு வதற்கும், அதை மேலும் உரு வேற்று வதற்கும் எப்படி மேளத்தில் அடிப்பது என்பது பற்றி கற்றுத் தெரிந் திருந்தான்.

தனது தந்தையின் உடலுக்குள் ஏதோ வொரு சக்தி புகுந்து ஆட்டுவிப்ப தையும், அது அம்மனாக இருக்கக்கூடும் என்ப தையும்... உணர்ந்து கொண்ட அவன், உருவேற்றும் ஆட்டத்திற்கான மேளத் தின் தாளலயங்களை மாற்றிமாற்றி அடிக்கத் தொடங்கினான்.

பூசாரியார் உச்சக்கலையில் எப்படி ஆடினாரோ... அதேபோன்று நல்லானும் இப்போது ஆடிக்கொண்டிருந்தார். திடீரென தனது இரண்டு கைகளிலும் வேப்பிலைக் கொத்தை எடுத்தவர், மூலஸ்தானத்திற்குள் செல்வதற்கு தனக்கு முன்னே நிற்பவர்களைப் பார்த்து வழியை விடுமாறு சைகையால் காண்பித்தார். பலரும் பயத்தில் வழியைவிட்டு ஒதுங்கி நின்றனர்.

மேள அடிக்கு ஏற்ப நல்லான் சுற்றிச் சுழன்று ஆடிக்கொண்டிருந்தார். அவரது மெல்லிய உடல்வாகு தாள அடிகளுக் கேற்ப இசைந்து கொடுத்துக் கொண்டி ருந்தது. அவரது பாதங்கள் மூலஸ்தானத் தின் முகப்பு வாசலருகே நெருங்கின. இப்போது அவரது ஆட்டம் உச்சநிலை யில் இருந்தது. அடுத்து என்ன நிகழப் போகிறது... என்பதை தனது பறை அடிப்பு அனுபவத்தின்மூலம் உணர்ந்து கொண்ட சரவணன், வலு உற்சாகமாக தனது கரங்களை இயக்கிக் கொண் டிருந் தான். முகப்பு வாசலடியில் ஆடிக் கொண்டிருந்த நல்லான், வாசலின்மேல் மெல்லத் தனது வலதுகாலை எடுத்து வைத்ததும், சபைக்குழுவினர் பதறியே விட்டனர். நல்லானை உள்ளே போகவி டாமல் தடுக்க எவருக்கும் துணிவு எழ வில்லை. அவரது ஆட்டம் பொய்யெனக் கூறினால், கோயிலும் அதன் வழிபாடும் அர்த்தமற்றுவிடும். அதன்பின் தர்ம கர்த்தா சபையில் எவருக்கும் வேலையிருக் காது... என்பதை உணர்ந்த சபையினர், முகம் இறுகிய நிலையில், நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சபைத் தலைவரின் சிவலைமுகம் சிவந்து கிடந் தது.

திருப்பணி எனும் பெயரால் ஊர்மக்க ளிடம் வசூலித்த பணம்... கௌரிக்காப்பு நாள்கள்... அர்ச்சனைப் பற்றுச்சீட்டுகள்... சக்கரைத்தளுசுகள் தயாரித்தல்... போன்ற வற்றின்மூலம் பெற்றுக்கொண்ட பணத் தின் பெரும்பகுதிக்கு, கள்ளக் கணக் குப்போட்டுச் சுருட்டிக்கொண்ட பழிதான் இன்று நல்லான் வடிவில் வந்து நிற்குதோ...? எனத் தலைவரின் மனதுக் குள் பல சிந்தனைகள்... அவர்திரும்பிப் பூசாரியைப் பார்த்தார். பூசாரி ஒருவித மயக்கநிலையில் சுவரோடு சாய்ந்தி ருந்தார். அதைப் பார்க்க கடுப்பேறிக் கொண்டது தலைவருக்கு.

மூலஸ்தான வாசலில் கால் வைத்த நல்லான், கலையில் ஆடியபடி... மெல்ல உள்நுழைந்து, அம்மன் சிலைக்கு முன் பாக ஆடிக்கொண்டிருந்தார். சனங்களின் "அரோகரா..." ஒலிகளையும் மீறி அங்கு அதிர்ந்து கொண்டிருந்தது ஆலயத் துக்குள் சரவணனின் பறையொலி!

அலெக்ஸ் பரந்தாமன் எழுதும்
படிப்பும் பாதிப்பும் தொடர்
அடுத்த இதழில் வெளிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகள்

திருகோணமலையைச் சேர்ந்த இளம் எழுத்தாளினி. கவிதைகளோடு திருமலையாள் எனும் புனை பெயரில் இலக்கிய உலகிற் புகுந்த சரண்யா எனும் இயற் பெயரைக் கொண்ட இவர் தற்போது சிறுகதை உலகத்தில் காலடி எடுத்து வைத்துள்ளார். இவரின் முதற் சிறுகதை இது.





திருமலையாள்

வீட்டு வாசலில் இருந்து வானத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தேன். மனதுள் எத்தனையோ இனிய நினைவுகள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன.

வாழ்க்கை என்பது எவ்வளவு அழகானது. எல்லாருடைய வாழ்க்கையிலையும் எத்தனையோ விஷயங்கள் வந்துபோனாலும் மாறாமல் மனசில இருப்பது கொஞ்சம் தான். அப்பிடி அழிக்கவே முடியாம எத்தனை இனிமையான நினைவுகள் . சில நினைவுகள் மனதில் இன்பம் தரும். சில மனதில் துன்பம் தரும். பாடசாலைக் காலம் ஒருவகையான அனுபவம். அதைவிடக் கல்லூரிக்காலம் வித்தியசமான அனுபவம். கல்லூரிக்காலத்தில்தான் நட்பு உறுதியடைகிறது என நினைக்கிறேன்.

நட்பு ஒரு அற்புதமான உறவு. ஒரு உணர்வு என்று கூடச் சொல்லலாம்.. எதிர்பாராமல் நாமே உருவாக்கிக் கொள்வது.. எப்படி வந்தாலும் , அது தரும் இன்பமும் துன்பமும் சுகமாக இருக்கும் ..சில குணாதிசயங்களால ஈர்க்கப்பட்டு இதயத்தைத் தொட்டு பல வருடமாகத் தொடரும் நட்பு கடைசி வரை இந்த காரணத்தினால்தான் நட்புறவாடினேன் என் பதை மட்டும் சொல்லிக் கொள்வதில்லை.. பிடிக்கும் எதற்கு என்று தெரியாமல் பிடிக்கும். அன்பு மட்டும் ஆணிவேராக இருக்கும். காலம் சில விஷயங்களை திரும்பவும் நினைத்துப் பார்க்கவைக்கும் அப்பிடி நினைத்துப் பார்க்கும் போது அப்போ நடந்த சோகமான விஷயங்கள் கூட சுகமானதாக இருக்கும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிடியான ஒன்று தான் ATI (Advanced Technical Insititute) வாழ்க்கை. இங்குதான் படித்தேன். இங்கு தான் நட்பின் உயர்வுகளையும் கற்றுக் கொண்டேன். இங்குதான் நட்பின் பிரிவையும் அனுபவித்தேன். இங்குதான் காதல் பற்றியும் அறிந்தேன். சந்தோஷமான அந்த உணர்வுகளை எப்படி நான் மறக்க முடியும்.

என் கல்லூரி வாழ்க்கையில் மறக்க முடியாத மகிழ்ச்சி நிறைந்த ஒரு நாள். அன்றைக்குத் தான் ATI வாழ்க் கையில் எமக்கு முதலாவது நாள் .. இப்போ தான் போன மாதிரி இருக்கு. ஆனால் அதுக்குள்ள 4 வருஷமாச்சு.... நினைக்கவே முடியவில்லை.

போகும் போது யாரையும் தெரியாது. முதல்நாள் எங்களுக்கிடையிலான உறவு நல்லாகப்போனது போல மற்றைய நாளெல்லாம் நல்லாவே போச்சு.. இந்த நாலு வருசத்தில் எத்தனை உரசல்கள் எத்தனை காதல்கள் எத்தனை காதல் முறிவுகள்.. அப்பப்பா இத்தனை இருந்தும் எங்களுக்கிடையிலான அந்த நட்பின் ஈரம் மாறவேயில்லை.

கடைசி நாள் கொண்டாட்டம் மாணவர்களுக்கானது என்று முதல் நாளே சொல்லியாச்சு.

அந்த நாள் மாணவர்களே தலைமை தாங்கி நடத்தணும், மாணவர்களது திறமையை காட்டணும்னு சொல்லிவிட்டார்கள். நாம் சும்மா இருப்போமா? இனியும் இப்பிடியொரு சந்தர்ப்பம் கிடைக்கபோறது இல்ல, இத எப்பிடியும் பயன்படுத்தோனும்னு நினைச்ச எல்லாரும் பெயர் குடுத்தாங்க. அந்த நாள் எல்லாரும் ஆர்வமா வளர்த்த நாய் முதலாளி முகத்த பாக்கிற மாதிரி பாத்திட்டு இருந்தோம்.. எல்லாரும் சும்மா சொல்லக்கூடாது வாயப் பிளந்திட்டு பார்க்கிறளவுக்கு நல்லா தான் பண் ணாங்க.. அப்போ மாறி மாறி அன்பைப் பரிமாறிய நண்பர்கள் தான் இப்பவும் மாறாம ஒன்னா சேர்ந்து இருக்கிறோம்.

நாங்கள் ஒன்றாக இருக்கிற ஒவ்வொரு தருணத்தையும் சந்தோசமாக அனுபவிப்போம். நிறைய சந்தோஷம், குட்டி குட்டி சண்டைகள், சேர்ந்து படிக்கிறோம் என்ற பேரில் போடுகிற அட்டகாசம், பிறந்தநாள் வந்தா நமக்குன்னு இருக்கிற எவரஸ்ட் கேக் கவுசிலை அந்த பிறந்த நாளுக்கு குடிக்கிற ஒரே தண்ணிப் போத்தல், மத்தியானமானால் வேண்டுகிற சோற்றுப் பொதி அதையே அடிபட்டு சாப்பிட ஒரு கூட்டம், மரத்தடிய சுத்தி இருந்து பேசும் புரளிகள், பெயர் சொல்லி கூப்பிடுறத விட அவங்க பட்டப்பெயர் சொல்லிக் கூப்பிடுறதில இருக்கிற சந்தோஷம், விரிவுரையாளர்கள் வரும் வரைக்கும் விளையாடுற கண்ணா மூச்சி, கமறா இருக்குன்னு ஒழிஞ்சு ஒழிஞ்சு செய்ற அட்டகாசங்கள், நமக்காக வருகைப் பதிவுப் புத்தகத்தில்( Attendence sheet) நண்பர்கள் வைக்கும் கள்ள கையெழுத்து, அத கண்டுபிடிச்சு மாட்டிக்கொண்ட தருணங்கள், எப்ப வருவேன் எப்பிடி வருவேன் என்று தெரியாம வகுப்பு எடுக்க வரும் எங்கள் ஆசிரியர், குறிப்பு இல்லாவிடினும் சுவாரஸ்யமா பாடம் எடுக்கிற கில்பேட் ஆசிரியர், வகுப்பு எடுக்கும் போது ஏதாச்சும் வினோதமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை சொல்ற தமிழ்செல்வன் ஆசிரியர், ஒவ்வொரு தடவையும் கேள்வி கேட்டு பதில்சொல்லாட்டி வருகை இல்லை என போடுற நம்ம நிறோஜ் ஆசிரியை, எப்பவுமே பரிசோதனைச் சாலையே (lab) தஞ்ச மெண்டு இருக்கிற பொஸ்கோ அண்ணாவும், சுரேஸ் அண்ணாவும், ATI வாசல்ல நாங்க வந்ததுமே புன்சிரிப்போட காலை வணக்கம் சொல்கிற காவலாளிகளும், வெள்ளிக்கிழமையானா நடேசர்கோவில் போய் சாப்பிடுற அமுது சோறு, பரீட் சைக்கு 10 நிமிஷத்துக்கு முன்னாடி பதற்றத்தோட திருப்பி பார்க்கும் கடைசி நேரக் குறிப்புகள், ஐயம்(Doubt) என்று சொல்லி நல்லா படிச்சவனையும் குழப்பி விடுற கடைசி வாங்கில் நண்பர்களும், பரீட்சைக்கு முன்னால யாரு பக்கத்துல யாரு மேசை வருதுன்னு எங்கிருந்து இலக்கம் தொடங்குதென்று பாத்து வைக்கிற சில கூட்டம், பரீட்சை முடிஞ்சு வந்து பரீட்சை பற்றி விவாதிக்கிற பேர்ல ஒழுங்கா செய்யாதவனையும் வறுத்தெ டுக்கிற கெட்டிக்காரர்கள்,விரிவுரைகள் முடிஞ்சதும் பஸ்சுக்காக காத்து நிற்கும் தருணங்கள், பஸ்லையும் கத்தி கூச்சல் போட்டு சுற்றுலா பஸ்மாதிரி மாத்தும் சில கூட்டம், பஸ்ஸிலை சீட்டு வாங்கா மலே போகும் சிலர், நண்பனுட்ட காசில் லன்னா அவனுக்காகவும் சேர்த்து டிக் கெட் எடுக்கிறது, இதையே வாடிக்கை யாகவும் வைச்சிருக்கிறது. குறிப்புகள் பகிர பண்ண ஆரம்பிச்ச whatsapp group சாப்பாடு,sticker, memes, share பண்ற group ஆக மாறிய நாட்கள், அப்பப்போ எடுக்கிற selfies, groupies, பக்கத்து பகுதி நண்பர்கள், அவங்க கூட எடுக்கிற வேடிக்கைப் படங்கள் இல் லன்னா ஒரு மரத்தில் காயோ பழமோ பிடுங்கி சாப்பிட்ட நாட்கள், மாலை வகுப்பு முடிஞ்சு நம்மை அழைத்துச் செல்பவர்கள் வருமட்டும் நமக்காக நிக்கிற நண்பர்கள், விளையாட்டு நாள், கலாசார நாள் வந்தா பாகுபாடில்லாம ஒற்றுமையா செய்ற வேலைகள், அப் பப்போ போற நம்ம வாசிகசாலை, போற சாட்டுல நம்ம போத்திலை நிரப் பும் குளிர் தண்ணீர், அத பாத்திட்டு அவங்க போத்திலையும் நிரப்பி தர சொல்ற எமக்கு மூத்தவர்கள், பகிடி வதைஎன்ற பேர்ல புதிதாக வந்த வர்களுடன்கூட விளையாடிட்டு இருந்த தருணங்கள், எல்லாரும் சேர்ந்து போன பயணங்கள், பிரியாவிடை நாளன்று சொன்ன நன்றிகளும் மன்னிப்புகளும் இப்பிடி பல மறக்க முடியாத தருணங் களை திரும்பி மீட்டிப்பார்க்கும் போது மனதில் கொஞ்சம் கனம் இருந்தாலும் முகத்தில சின்ன சிரிப்பு வரும் ..

ஒருவரைப் பிடித்தவுடன் அதைக் காதல் என்று கருதி ஓடி வந்து சொல்கிற துணிவு அதை மறுத்து நான் உன்னை நண்பனாகவே கருதுகிறேன் என்று கூறும் பெண்களின் துணிவு. இவைகளை யெல்லாம் எப்படி மறக்க முடியும்.

ஒரு நாள் நான் கல்லூரி வாசலை விட்டு வீட்டிற்குச் செல்வதற்காக பஸ் நிலையத்திற்கு வருகிறேன். அங்கே அவன் நிற்கிறான். அவனைக் கண்டதும் சிரிக்கிறேன். அவன் என் கூடப்படிக்கும் நண்பன்தான். நல்லவன். வடிவானவன். அவன் மீது பல பெண்களுக்குக் கண். ஆனால் வகுப்பிற்கூட என்னைத் துறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறு என்று பார்த்துக் கொண்டே யிருப்பான். பஸ் நிலையத்தில் யாரும் இல்லை. அவன் எனக்கு அருகில் வந்து " உங்களிட்டை ஒன்று சொல்லவேணும்" என்கிறான். எனக்கு வியப்பாக இருக்கிறது. என்ன புதுமாதிரியாக மரியாதை தந்து கதைக்கிறான். சரி என்ன சொல்கிறான் என்று பார்ப்போமென என்னைத் தயார்ப்படுத்திக் கொள்கிறேன்.

" உங்களை நான் விரும்பிறன்" அவன்தான் கூறுகிறான். எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. உடம்பில் ஒரு பதட்டம் வருகிறது. நான் அவனை என்றைக்குமே அப்படி நோக்கியதில்லை. என்ன பதில் சொல் வது? குழப்பமாக இருக்கிறது. " நான் அப்பிடி உங்களோடை பழகவில்லை" என்கிறேன். அட நானும் மதிப்புக் கொடுத்துப் பேசுகிறேன். இது என்ன விந்தை. இதுதான் காதலோ!

அதற்குள் பஸ் வந்துவிடுகிறது. நான் ஏறிச் சென்றுவிடுகிறேன். பஸ்சில் ஏறியபின் எட்டிப் பார்க்கிறேன். அவன் அப்படியே நிற்கிறான். அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. ஓமென்று சொல்லியிருக்கலாமோ என மனது நினைத்தது. சீ வேண்டாமென்று இன்னொரு மனது சொன்னது.

அவ்வளவுதான். அடுத்த நாள் அவனைக் காணும் போது கூச்சமாக இருந்தது. அதற்குப் பின் இருவரும் கதைக்கவே இல்லை.

இதோ கடைசி நாளும் வந்துவிட்டது. அவனைத் தேடினேன். அவனைக் காணவேயில்லை. அந்த நிகழ்வுக்குப் பின் அவன் என் எதிரில் வந்ததில்லை. நானும் அவனை நினைத்ததில்லை. இதனை நான் என் நண்பர்களுக்கும் சொன்னதில்லை. கல்லூரி விட்டு வந்தபின்பும் நாங்கள் நண்பர்களாக சந்திப்போம். எங்களுக் கிடையில் எதுவும் வந்ததில்லை. அப்படி நாங்கள் பழகவுமில்லை. அவன்மட்டும் காணாமல் போய்விட்டான்.

எங்கள் உணர்வுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறுகதைதான். ஆனால் எங்களுக்கிடையில் முகிழ்த்த உறவுகள் எப்போதும் தொடர்கதையாகவே உள்ளது.

## படித்ததில் பிடித்தது


" உன் விசயத்தில் பலாத்காரம் நடந்திருக்கிறது. ஆனால் நானோ பலாத்காரத்திற்கு என்னையே உள்ளாக்கியிருக்கிறேன். நடந்த சம்பவத்தை மூடி மறைத்துவிட்டேன். ஏனென்றால் நான் உயர்தர நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்" என்றேன். ராஜ்கலி மெதுவாகச் சிணுங் கிக் கொண்டே" எனக்கு ஆண்வர்க்கத் தைக்கண்டாலே ஒரு வெறுப்பு ஏற்படுகின்றது. அவர்கள் எல்லோரும் வெறி பிடித்த மிருகங்கள். அவர்களிடத்தில் மனிதாபிமானமே கிடையாது. அவர்கள் பெண்களை காமப்பசிக்கு இரையாகவே நினைக்கிறார்கள். " என்று சொன்னாள்.

**- அர்த்தநாரீஸ்வரர் நாவல்-**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பலகை

தொடர்கதை





மு.தயாளன்

அத்தியாயம் 14

"என்ன மச்சான் என்ன நடந்தது?" என்று பதட்டத்தோடு கேட்டான். அதற்கு அவன் அப்போது வந்திருந்த தந்தியைக் காட்டினான்.

தந்தியில் அவனது அம்மா இறந்த செய்தி இருந்தது.

" ஆருக்கும் போன் பண்ணினியா மச்சான்?"

"ஓம்.... அம்மா சந்தைக்குப் போனவவாம்... சந்தையிலை ஆமிக்காரன் சுற்றிவளைக்க அதுக்குள்ளை ஆரோ போராளிப் பொடியன் நிண்டவனாம். அவன் தப்பி ஓட முயற்சிக்க ஆமிக்காரன் கண்ணை மூடிக் கொண்டு சுட்டிருக்கிறான். அதிலை நிண்ட பத்துப் பேருக்குமேலை சரியாம். அதிலை அம்மாவும் ஒரு ஆள்"

கொஞ்ச நேரம் அமைதியாக சூழ்நிலை இறுகிப்போனது.

கபிலன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு " மச்சான் இது தங்கச்சிக்குத் தெரியுமே?"

" இல்லை எண்டு நினைக்கிறன்." என்றான் நண்பன்.

" சரி எழும்பு தங்கச்சியிட்டைப் போட்டு வருவம்" என்று நண்பனை எழுப்பி அவனின் தங்கச்சி வீட்டை நோக்கி இருவரும் நடந்தனர்.

" ஏன் மச்சான் இவங்கள் இப்பிடி நடக்கிறாங்கள். சரி.. துப்பாக்கியைத் தூக்கினனீங்கள் ஏன் சனம் உள்ள இடத்துக்கு வர வேணும்?" என்றான் நண்பன்.


"அதில்லை மச்சான். அவன் சந்தைக் குள்ளை வாறான் எண்டதை ஆமிக்காரனுக்கு ஆர் சொல்லியிருப்பினம். எங்கடை ஆக்கள் தானே சொல்லியிருப்பினம். இவன் அங்க போறான் எண்டது தெரிஞ்சவன் இவனுக்குப் பக்கத்திலை இருந்தவனாகத்தானே இருக்கமுடியும். அப்ப இவங்கள் எங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன மண்ணாங்கட்டி பெற்றுத்தரப் போறாங்கள். எனக்கு விளங்கவே யில்லை." என்று கபிலன் கூறினான்.
"அண்டைக்கு பத்துப்பேர் முடிஞ்சு தெண்டால் எத்தனை அப்பாமாரும் அம்மாமாரும் செத்திருப்பினம். இரண்டு பக்கத்திற்கும் மனிச உயிர்களிலை கவனமில்லையெண்டுதானே அர்த்தம்."
நண்பன் திரும்பவும் கூறினான்.
" நான் அப்பாவையும் அம்மாவையும்

பயந்து நடந்து கொண்டிருந்தனர்.
நண்பனின் தங்கை இருக்கும் வீதிக்குள் இறங்கி வலது பக்கம் திரும்ப அவர்கள் வீடு வந்தது. கபிலன் சென்று வீட்டுக் கதவைத் தட்டினான். நண்பனின் சித்தப்பா வந்து கதவைத் திறந்தார். அவரைப் பார்க்கும் போது அவருக்கு இன்னும் விடயம் தெரியவில்லை என்றே தோன்றியது.
இருவரும் உள்ளே சென்று அமர்ந்து



இண்டைக்கே புறப்பட்டுவரச் சொல்லப் போறன். இனி அங்கை இருக்கிறது ஆபத்து" என்றான் கபிலன்.
இருவரும் எதுவுமே கதைக்காமல் வேகமாக நடந்து கொண்டிருந்தனர்.
வீதி நிரம்ப வாகனங்கள் ஊர்ந்து கொண்டிருந்தன. சனக்கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. தமிழர்கள் பயந்து

மெதுவாக சித்தப்பாவுக்கு விடயத்தைக் கூற அறையைவிட்டு வெளியே வந்த நண்பனின் தங்கைக்குக் கேட்டுவிட்டது. அவள் சத்தமிட்டு அழத் தொடங்கினாள். அவளை கட்டுப்படுத்துவது மிகக் கடினமாகவிருந்தது. இதற்குள் நண்பனின் சித்தப்பா தன் வீட்டிலிருந்த தொலைபேசியில் கரவெட்டிக்கு எடுத்து விசாரிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தார். அவரால் தொடர்பு கொள்ள முடியவில்லை. நண்பன் சகோதரியை அணைத்து விடயத்தை விளங்கப்படுத்தி ஒருவாறு அவளைக் கட்டுக்குள் கொண்டு வந்துவிட்டான்.

சிறிது நேரம் அங்கிருந்து கதைத்துவிட்டு கபிலனும் நண்பனும் தங்கள் அறைக்குத் திரும்பினார். கொழும்பில் இரவு நேரங்களில் வீதிகளில் நடந்துவருவதும் ஆபத்தாக இருந்தது.

அறைக்கு வந்ததும் கபிலனின் சிந்தனை முழுக்க தகப்பனையும் தாயையும் விரைவாக கொழும்புக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

அத்தோடு நாளைக்குப் பாடசாலையில் என்ன செய்வது தான் வகுப்பிற்குப் படிப்பிக்கும் பாடத்திற்கான தயாரிப்பில் ஈடுபட்டான்.

நாளைக்கு கபிலன் உயர்தர வகுப்பிற்கு பிரயோக கணிதம், எட்டாம் வகுப்பிற்கு விஞ்ஞானம் , ஒன்பதாம் வகுப்பிற்கு கணிதம் ஆகியன படிப்பிக்கவேண்டும். தான் அறிமுகப் படுத்தியவற்றை தானே மீறக்கூடாது என்பதால் பாடவழி காட்டியினை முறையாகத் தயாரிக்கத் தொடங்கினான்.

இரவு பதினொருமணிக்குத் தொடங்கியவன் முடிக்கும்போது நேரம் மூன்றாகிவிட்டது. எல்லாவற்றையும் வைத்துவிட்டு படுத்துவிட்டான்.

காலைஎழும்பியவன்நண்பன்படுத்திருந்த கட்டிலைப் பார்த்தான். அவன் அங்கு இல்லை. மேசையில் கடிதம் ஒன்று இருந்தது. தான் காலை பஸ்ஸில் யாழ்ப்பாணம் செல்வதாகவும் தங்கையை கவனமாகப் பார்க்கும்படியும் எழுதிவிட்டுப் போய் விட்டான். காலைக் கடன்களை முடித்துவிட்டு பாடசாலைக்குச் சென்ற கபிலனை வாசலிலேயே சந்தித்த உப அதிபர், அதிபர் பார்க்க விரும்புவதாகக் கூற நேரே அதிபரின் அறையை நோக்கிச் சென்றான் கபிலன். கபிலனைக் கண்ட அதிபர் " காலை வணக்கம் கபிலன்" என்று முகம் மலர வரவேற்றார்.

" என்ன மிஸ் அவசரமாக வரச் சொன்னீர்களாம்?" என்று கபிலன் கூற

" ஓம் இரும். கதைப்பம்" என்று அதிபர் கூற அவவுக்கு முன்னால் அமர்ந்தான் கபிலன்.

" கபிலன் இப்ப கொஞ்சத்திற்கு முந்தி கல்வித் திணைக்களத்திலிருந்து கதைத்தவை. அங்கையிருந்து இரண்டுபேர் கதைக்க வருகினம். அவை சில வேளை உங்கடை பாடத்தை அவதானிக்க வகுப்பறைக்கு வரலாம்" என்று கூறினார். கபிலன் சிரித்துக் கொண்டே

" அதுக் கென்ன மிஸ் வரட்டும் தாராளமாய்ப் பார்க்கட்டும். எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை" என்று அவன் கூற வியப்போடு அவனைப் பார்த்தார் அதிபர். எந்தவிதமான பதட்டமும் இல்லாமல் சர்வசாதாரணமாக அவன் ஏற்றுக் கொண்டது அவருக்கு ஆச்சரியத்தையே கொடுத்தது.

அதன்பின் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு கபிலன் தன் வகுப்பறைக்குச் சென்றான்.

கபிலன் அதிபரின் அறைக்குச் சென்றதை அவதானித்த சந்திரா நன்றாக ரசித்துக் கொண்டு தன் வகுப்பறை வாசலில் நின்று கொண்டிருந்தாள். உள்ளே சென்ற கபிலன் வெளியே வரும்போது கவலையோடு வருவானென்றே எதிர்பார்த்தாள் ஆனால் அவன் சந்தோசமாக வந்தது அவளுக்கு ஏன் என்று புரியவில்லை. "சரி பார்ப்போம்" என்று மனதிற்குள் கூறிக் கொண்டு தன் வகுப்பிற்குச் சென்று விட்டாள். அவள் போகும் பாதையில் தான் வசந்தியின் வகுப்பறையும் உண்டு. கதவைத் தட்டி வசந்தியைக் கூப்பிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வசந்தி.. இண்டைக்கு கல்விக் கந்தோரிலையிருந்து இரண்டுபேர் கபில னின்ரை பாடத்தைப் பார்க்க வருகினம். இண்டைக்கு கபிலன் அதோகெதிதான்." என்றாள்.

" அப்பிடியெல்லாம் இல்லை. வந்தால் என்ன. பார்க்கட்டுமே. கபிலன் நல்லாய்ப் படிப்பிப்பார். இருந்து பாருங்கோ அவரை அவங்கள் புகழ்ந்துதான் செல் வினம்."

என்றாள் வசந்தி. சந்திராவிற்கு அவள் பதில் சொன்ன தோரணை கொஞ்சமும் பிடிக்கவேயில்லை. முகத்தைச் சுழித்துக் கொண்டு போய்விட்டாள். இந்த விடயம் சந்திராவுக்கு எப்படித் தெரிந்தது?

வசந்தியின் சிந்தனை இதுபற்றியே சுழன்று கொண்டிருந்தது.

கபிலனுடைய திறமையில் வசந்திக்கு அசாத்தியமான நம்பிக்கை. பார்ப்போம் என்று மனதுள் நினைத்துக் கொண்டு தன் பாடத்தில் அவள் கவனம் செலுத் தினாள்.

சிறிது நேரத்தில் அதிபரிடமிருந்து சுற்றுநிருபமொன்று வந்தது. தேனீர் இடைவேளையின்போது அவசரக் கூட்டம் நடைபெறவுள்ளது என்றும் எல்லா ஆசிரியைகளையும் கலந்து கொள்ளும்படி கேட்டிருந்தார்.

சுற்று நிருபம் வந்ததும் ஆசிரியர்கள் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண் டார்கள்.

தேனீர் இடைவேளையின்போது சகல ஆசிரியர்களும் அதிபரின் அறையில் ஒன்று கூடினார்கள்.

அதிபர் தொண்டையைச் செருமிக் கொண்டு இன்று மதியத்தின்பின் கல்வி அமைச்சிலிருந்து இருவர் வரவுள்ளார்கள் என்றும் அவர்கள் சிலசமயம் உங்கள் வகுப்புகளுள் புகுந்து பாடங்களை அவதானிக்கவும் செய்வார்கள். ஆதலால் எல்லோரும் அதற்குத் தயார் நிலையில் இருக்க வேண்டு மென்றும் கூறினார்.

அப்போது ஆசிரியை சந்திரா " மிஸ் உதை நான் அண்டைக்கே எதிர் பார்த்தன். தேவையில்லாமல் புதுப்புது விடயங் களை புகுத்தேக்கையே அவர்கள் வரு வார்கள் என்று நான் சொன்னன். ஆரும் கேட்கயில்லை. இப்ப அனுபவிக்க வேண்டியுள்ளது" என்றாள்.

எல்லா ஆசிரியைகளும் சந்திராவை ஒரு புழுவைப் பார்ப்பதுபோல் பார்த்தார்கள். அதிபர் சந்திரா சொன்னதைப் பொருட் படுத்தவேயில்லை.

மற்ற ஆசிரியைகளுக்கு அறிவுரை கூறி அவர்கள் வகுப்பறையில் என்ன செய்ய வேண்டு மென்பதையும் அவர்கள் என்ன கேட்பார்கள் என்பதையும் விரிவாக விளக்கினார்.

யாருமே தான் சொன்னதைப் பொருட் படுத்தாமல் இருப்பதைப் பார்த்து கோபங் கொண்டு விறுக்கென்று எழும் பிப் போய்விட்டாள்.

கபிலனுக்கு இது பிழையாகப்பட்டது. ஒரு அதிபரை ஆசிரியை மதியாமல் இப்படி நடந்து கொண்டமை வேத னையாக இருந்தது.

கூட்டம் முடிந்தது. வெளியே வந்த கபிலன் வசந்தியிடம் சந்திரா ரீச்சரின் இந்தச்செய்கைபற்றிக்கவலைப்பட்டான்.

" அது கபிலன். சந்திரா நிர்வாகத்திலை முக்கியமான ஒரு ஆளின்ரை நெருங்கினை சொந்தக்காரி. அதுதான் இந்தக் கொழுப்பு. எவ்வளவு நாளைக்குத்தான் இந்தக் கொழுப்பைக் காட்டப் போறாவோ தெரியவில்லை. பார்ப்பம்." என்றாள் வசந்தி.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. மதியம் தாண்டிக் கொண்டிருந்தது.

பாடசாலையின் பெரிய முன் கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

( இன்னும் வரும்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலினி கதிர்

# அந்த ஒரு நாள்

நான் படுக்கையை விட்டெழும்ப மனசில்லாமல் சாளரத்தினூாடே தெரிந்த அல்ப்ஸ் மலைகளுடே மனதால் நடந்து கொண்டிருந்தேன். காலைவேளையை அழகாக்க அவசரம் அவசரமாக குங்குமத்தை அள்ளி அப்பிக் கொண்டு வெளிவந்திருந்தான் ஆதவன். வானமெங்கும் மெல்லிய குங்குமச் சிவப்பாய் பார்க்கப் பார்க்க அலுக்காத காட்சி. கோடை காலங்களில் எப்போது பார்த்தாலும் தெவிட்டாத காட்சி. பத்தாவது மாடியில் எமது வீடு அமைந்திருந்தது இந்தக் காட்சிகள் பார்ப்பதற்குத் தோதாக இருந்தன. அந்த அழகை என் கண்களுக்குள் கொண்டு போய் அடக்கிவிட பேராசைப்பட்டேன். இலங்கையில் பிறந்திருந்தாலும் இந்த அழகான சுவிஸ் நாட்டில் வாழக்கொடுத்து வைத்திருக்கிறேனே. அதிஷ்டக்காரி தான். ஆதவன் அழகை இரசித்த அதே வேளை அப்பா அம்மாவின் நினைவுகள் அலைமோதுவதை என்னால் தவிர்க்க முடியாதிருந்தது.

ஈழப்போராட்ட தீக்குள் ஆகுதியாகாமல் என்னைத் தப்ப வைத்த என் அப்பா. அவர்களையெல்லாம் விட்டுவிட்டு நாடு விட்டோட நான் தயாரக இல்லை என்றாலும் நாளும் பொழுதும் பேசிப்பேசியே என் மனதை மாற்றி சுவிசுக்கு அனுப்பி வைத்துவிட்டாரகள். அவர்களைவிட்டு இங்கு தனியாக நானொரு வாழ்க்கை வாழ்வேனென்று கனவிலும் நினைத்து இருக்கவில்லை. ஆமிக்காரர்களின் கெடுபிடியும் தேடுதல் நடவடிக்கை விசாரணை என்ற பெயரில் இளையவர்களை பிடித்துச் செல்வதும் என்னைப் பயமுறுத்தவே செய்தது. ஆனாலும் என்னையும் பெரிய அண்ணாவையும் பிடித்துச் செல்லும்வரை அதன் கொடுமை தெரியாமலே இருந்தேன். அந்தநாள் என்னால் மறக்க முடியாத நாள். எங்கள் கண்ணுக்கு முன்னாலேயே அண்ணாவைப் போட்டு உருட்டி உருட்டி இரத்தம் வரும்வரை அடித்ததும், தரையில் இழுத்தபடியே சென்றதும் எப்படி என்னால் மறக்க முடியும்.



சுவிஸ்லாந்தில் வதியும் இவர் குழந்தை வளர்ப்பு சம்பந்தமான பல நூல்களை எழுதியுள்ளார். சமீபகாலமாக சிறுகதைத் துறையில் தன் முத்திரையைப் பதித்து வருகிறார். பத்துக்கு மேற்பட்ட சிறுகதைகளை சிறுகதை மஞ்சரியில் எழுதியுள்ளார். விரைவில் சிறுகதைத் தொகுப்பும் வெளிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயங்கி விழுந்த அம்மாவுக்கு என்ன நடந்ததோ என்று நான் பதறியபோதும் என்னை அவர்கள் கூட்டிச்சென்றார்கள். அங்கு அவர்கள் என்னிடம் நடந்துகொண்ட முறை என்னை சுவிஸ் வர ஊக்குவித்தது. ஒருநாள் முழுவதும் எங்கள் பலரை அவர்கள் முகாமில் வைத்து விசாரித்த நாளை என்னால் மறக்க முடியவில்லை. எங்களை எதுவும் செய்து விடுவார்களோ என்ற பயத்தில் செத்துச்செத்துப் பிழைத்தேன். கிருசாந்திக்கு நடந்ததுபோல் எனக்கும் ஏதும் நடந்திட்டால்? அந்தநாள் என் மனஏட்டில் பதிந்து இன்னும் என்னை அலக்கழிப்பதை தவிர்க்க முடியாமலிருக்கிறது. அழைத்துச் சென்ற அண்ணனை கடைசிவரை விடவேயில்லை. மனப்பாதிப்பு அடைந்தவர்களுக்கு உளவியல்ரீதியாக ஆலோசனை கூறும் படிப்பு படிப்பதற்கு அந்தநாள்தான் ஊக்குவித்ததென்னவோ உண்மைதான். வெறும் கற்பனையான பயத்தினாலேயே நான் பயந்தேன் என்றால் உண்மையில் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு எத்தகைய மனப்பாதிப்பு ஏற்படும்? அதுவும் பதின்ம வயதுச் சிறுமிகள் எத்தகைய பாதிப்புக்கு உள்ளாவார்கள். என்னோடு பிடிக்கப்பட்ட ஒரு அக்கா தனக்கு நடந்த கொடுமையைச் சொன்னபோது ஏற்பட்ட நடுக்கம் இன்னும் என்னோடு ஒட்டியே இருக்கிறது. அண்ணாவை இழந்த அந்த நாளை என்னால் எப்படி மறக்க முடியும்?



அந்த ஒருநாள் என் முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தி விமானம் ஏறவைத்தது. அண்ணா திரும்ப வராத துக்கத்தில் அப்பா சொன்னார் இப்படி ஒவ்வொரு பிள்ளையாக பறிகொடுக்க முடியாது. சின்ன அண்ணனும் நீயும் வெளிநாடு எங்காவது போங்கோ. அவரின் முடிவு எங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு கடத்தியது. பதினாறு வயதில் வந்தது எனக்கு அகதி அந்தஸது வெகு விரைவில் கிடைக்கச் செய்துவிட்டது. சுவிஸ் மொழியான டொய்ச் படிப்பதில் எனக்கு எந்த சிரமமும் இருக்கவில்லை. எங்கள் நாட்டில் எங்களுக்கு கிடைக்காத பாதுகாப்பு இந்த நாட்டவரின் அன்பு எல்லாமே என்னை வெகுசீக்கிரத்தில் படித்து நல்ல ஒரு வேலையில் அமர வைத்தது. அண்ணாவும் படித்து நல்ல வேலையில் அமர நானும் பிரிந்து எனக்கான வாழ்வை வாழ ஆரம்பித்து விட்டேன். அப்பா அம்மாவைப் பிரிந்திருக்கும் சோகத்தை முதியவர்களைப் பராமரிக்கும் வேலையின் மூலம் தீர்த்துக் கொண்டேன். அதோடு உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கும் மயிலிறகால் தடவுவதுபோல் ஆறு தல் கூறி மனசோடு மனம் விட்டுப் பேசி அவர்களை ஆற்றுப்படுத்துவதிலும் தேர்ச்சிபெற்றுவிட்டேன்.

இன்று முதியோர் விடுதியில் ஓய்வுநாள். அதற்குப் பதிலாக ஆற்றுப்படுத்தும் வேலைக்குச் செல்ல வேணடும். எனது கணவர் அந்த நாட்களில் எனக்கு அனுசரணையாக இருப்பது எனக்கு புத்துணர்ச்சியை தரும். அன்றையநாள் வீட்டுவேலை முழுவதையும் தானே பார்த்துக் கொள்வார். போவதற்கு முதலும் திரும்பிவரும்போதும் என்னைத் ஊக்குவிப்பார். பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிடுவதும் குடும்பமாக உட்கார்ந்து வேடிக்கையாக விளையாடுவதும் வழக்கம். இதனாலேயே என் பிள்ளைகள் நான் இந்தவேலைக்குப் போகும் நாளை விரும்பிக் காத்திருப்பார்கள். படுக்கையில் இருந்தவாறே பலதையும் நினைத்து வெறுமனே படுத்திருந்த என்னருகில் என் கணவன் வந்தமர்ந்து நிலாக் குட்டி! குற்றன் மோர்கன். (காலை வணக்கம்)ஷோனன் ராக்(அழகான நாளாக இருக் கட்டும்) வீடர் சேகன்(போய் வருகிறேன்) கண்ணம்மா. வாழ்த்தியபடியே நெற்றியில் முத்தமிட்டவரை ஈனன் ஃக் (உங்களுக்கும்) கண்ணா கையைப் பற்றி லேசாக முத்தம் இட்டேன். மகிழ்வோடு அவர் பணிக்கு விரையவும் நான் பாடசாலை புறப்படத் தயாராய் நின்ற பிள்ளைகளுக்கும் வாழ்த்தோடு முத்தங்களையும் பரிசாகக் கொடுத்து என் கடமைக்குத் தயாரானேன்.

இன்று கணவனால் கொடுமைப்படுத்தப்பட்டு பிரிந்து வாழும் ஒரு பொஸ்னியப் பெண்ணுடனான சந்திப்பு. அப் பெண் ஒருநாளைப்போல் ஒருநாள் இருப்பதில்லை. சிலநேரங்களில் அழுது கொண்டேயிருப்பாள். சிலநேரங்களில் பொஸ்னிய மொழியில் பேசிக்கொண்டேயிருப்பாள். சில நாடகளில் என்னை அடிக்கவோ கடிக்கவோ முற்படுவாள். ஆனாலும் அடுத்த நொடியே என்னிடம் மன்னிப்புக் கேட்டு நான் சொல்வதை செவிமடுப்பாள். பிள்ளைகளும் அவளுக்கு அனுசரணையாக இல்லாமல் இருப்பதுதான் மிகவும் கொடுமை. பரந்து விரிந்த இவ்வுலகில் பெண்களுக்குத்தான் எவ்வளவு கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. ஆபிரிக்க பெண்கள் இக் கொடுமைகளால் அதிகம் பாதிக்கப்படுவது போல் தெரியவில்லை. அவர்கள் வலிமையானவர்கள். தமக்கெதிராக வன்முறையிலீடுபட்டால் தாமும் வன்முறையைக் கைக்கொள்ளத் தயங்க மாட்டார்கள். மென்மையான இயல்பினரே பாதிக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பதட்டமில்லாமல் என் அறையினுள் நுழையவும் என் பின்னே கிறேற்சி மடம் வணக்கம் சொன்னபடி தெளிவாக வந்திருந்தாள் அப்பெண். அன்றைய உரையாடலில் நீங்க ஒரு வேலைக்குப் போங்கோ நான் பரிந்துரை செய்கிறேன்.சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் வேலை செய்ய பிடிக்குமா? கேட்டவுடனேயே எனக்கு விருப்பம்.எனக்குத் தருவார்களா? ஏக்கத்துடன் பதிலளித்த அவளுக்கு சிறுவர்களுடன் நீங்க வேலை செய்தால் அவர்களின் சந்தோஷமும், உற்சாகமும் உங்களுக்குத் தொற்றிக் கொள்ளும் என்று உற்சாகப்படுத்தி அதற்கான கடிதத்தை தயாரித்தேன். எனக்கு இன்று மகிழ்ச்சியாக இருந்தது. என்னால் ஒருத்தியை ஆறுதல்படுத்தி நல்ல வழியைக் காட்டமுடிந்ததே.

நாளைக்கு முதியோர் இல்லத்தில் வேலை. அங்கு இருக்கும் ஒரு முதியவர் சக்கர நாற்காலியில் இருப்பவர். சமீப காலமாக அவருக்கு மலம் கழிக்க வேண்டும் போன்ற உணர்வு வரும். கூட்டிப் போனால் செய்ய மாட்டார்.ஒரு நாளைக்கு எத்தனையோ தரம் அப்படிச் செய்வார்.அவரைப் பார்ப்பவர்களுக்கு சிரமம் கொடுக்கிறோமே என்று நினைக்க மாட்டார்.அவரைப் பார்க்க நாங்கள் எல்லோருமே தயங்குவது உண்மைதான். போகும்போதே அந்த முதியவரைப் பார்க்கும் பொறுப்பு வந்துவிடக் கூடாதே என்று எண்ணிக் கொண்டே போனேன்.ஆனால் அந்தப் பொறுப்பு எனக்கே ஏற்பட்டது.பல தடவை கழிப்பறைக்குச் சென்றும் செய்யாமல் திரும்பினார். எட்டாவது தடவையாக என்னைக் கூட்டிச் செல்லும்படி கேட்ட போது உங்களுக்கு வராது.பிறகு போகலாம் என்று தட்டிக் கழித்தேன். மாலை நேரம் அவரை வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்ல விடுதி வாசலில் காத்திருந்ததைக் கண்டேன்.அவர் அருகே போனபோது என் கையைப் பற்றி என்னை கழிப்பறைக்கு கூட்டிச் செல்ல மறுத்து விட்டாய் என்ன? இப்போது நான் வைத்தியரிடம் போகிறேன் உன்னால்தான். கூறிவிட்டு வாசலைக் கடந்து சென்று விட்டார்.அடுத்த நாள் நான் போன போது அவர் இறந்துவிட்ட செய்தி என்னை உலுக்கிவிட்டது. விக்கித்துப் போய்விட்டேன். இவ்வளவு நாள் நான் செய்தும் கடைசி நாளில் அவரைக் கூட்டிச் செல்லாமல் விட்டு விட்டேனே. அவர் கேட்கும் போதெல்லாம் கூட்டிச் செல்ல வேண்டியது என் கடமை.குற்ற உணர்ச்சி என்னை அலக்கழித்தது. இலங்கையில் ஏற்பட்ட அந்த நாளை இறக்க முடியாமல் இன்னும் தோளில் சுமந்து கொண்டிருக்கும் நான் இப்போது அந்த முதியவரின் நினைவையும் சுமக்கத் தொடங்கினேன். இறக்கி வைக்க முடியாத சுமையாக நிவர்த்தி செய்யவே முடியாத ஒரு சுமை என் தலையில் இறங்கி அழுத்தியது. இருந்த அந்த ஒரு நாளுடன் இன்றும் சேர்ந்துகொண்டு என்னை அழுத்தத் தொடங்கியது. மற்றவர்களை ஆற்றுப்படுத்தும் என்னை ஆற்றுப்படுத்த முடியாமல் மனம் என்ற வஸ்து அலக் கழித்து சுமையாக இறங்கியது.

இந்த உலகில் ஜெயிப்பது என்று
நினைப்பது எல்லாம் தோல்வியே.
தன்னை வெற்றி கொள்ள வேண்டும்.
அதற்குத்தான் பிறவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபதிலகை

# கழுமரம் தேடும் எலும்புக்கூடு

அந்த வயோதிபர் பராமரிப்பு இல்லத்தில் மதிய உணவு பரிமாறப்படும் நேரம். பராமரிப்பாளர்கள் இருவர் சமையல றையில் இருந்து உணவு கொண்டுவரும் ஒரு அகலமான தட்டு பொருத்தப்பட்ட வண்டியில் சூடாக மூன்று சில்வர் வாளிகளை வைத்து தள்ளிக்கொண்டு வந்தார்கள். ஒரு வாளியில் அவித்து உரித்த உருளைக் கிழங்கும் இரண்டாவது வாளியில் அரைத்த இறைச்சியில் செய்யப்பட்ட உருண்டைக் கறியும், மூன்றாவது வாளியில் பச்சை பட்டாணி புரோக்கோலி சிறிய காரட் சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவும் இருந்தது. இன்னுமொரு வண்டியில் உணவு பரிமாறும் தட்டுக்கள் வென்னீரில் கழுவி காயவைத்தும் சூடு



லண்டனில் வாழும் இவர் சிறுகதை மஞ்சரியில் பல சிறு கதைகளை எழுதியுள்ளார். அயராது பணிபுரியும் சமூகசேவகி. வரலாற்றுப் புனைவுகளிலும் அவற்றை ஆராய்ந்து தெளிவதிலும் அதிக ஆர்வம் காட்டுபவர். தாய் நாட்டு மக்களின் இன்னல் தீர்க்க பல வழிகளில் அமைப்பு ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியிலும் இயங்கிவரும் பெண்மணியாவார்

மாறாமல் கொண்டு வந்தார்கள். முள்ளுக்கரண்டி, கத்தி, உணவு உட்கொள்ளும் கரண்டி மூன்றும் சூடான கை துடைக்கும் கைகுட்டைகளில் சுற்றப்பட்டு அதில் இருந்தன. அங்கே வசிக்கும் (Residence)வயோதிப தாய்தந்தையர் உணவுக்காக காத்து இருக்கும் கூடத்தில் குழந்தைகள் போல் வரும் வண்டியை எதிர்பார்த்து சிறிய பரபரப்புடன் காத்து இருந்தவர்களுக்கு உணவு வண்டி நெருங்கும்போது வரும் நறுமணம் அவர்கள் முகத்தில் வெளிச்சம் பாச்சி நாவில் பசியையும் தூ ண்ட அங்கே சலசப்பு தணிந்து நிசப்தம் நிலவ எல்லோரின் கண்களும் உணவு வண்டியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருக்க, அவர்களுக்குள் 80 வயதுடைய மெரினா மட்டும் எந்தவித ஆரவாரமும் இன்றி காணப்பட்டார். அவர் இன்று மட்டுமல்ல எப்போதும் இப்படித்தான் காணப்படுவார். அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி, அவர் வேறு உலகில் சஞ்சரிப்பவர் போல காணப்படுவார். இது அங்கு கடமையாற்றும் எல்லா பராமரிப்பாளர்களுக்கும் தெரியும். ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு அங்குவந்து கடமையில் இணைந்து கொண்ட விக்ரோறியாவுக்கு இது புதிதாக இருந்தது. உணவுத்தட்டுடன், ஒன்றுசேர்ந்து சுற்றப்பட்ட கரண்டி சுருளை ஒவ்வொருவரின் மேசை முன்னால் வரிசையாக எடுத்து வைத்துக் கொண்டு போன விக்ரோறியா, மெரினாவின் முன்னால் வைக்கப் போகும்போது அவளுடன் கூட வந்த உடன் பணியாற்றி தாரா, விக்ரோறியாவின்கையில்இருந்தகத்தி முள்ளுக்கரண்டி கொண்ட சுருளை சற்று வேகமாக வாங்கிக் கொண்டாள், என்று சொல்வதை விட வேகமாக பிடுங்கிக் கொண்டாள். இந்த செயலை சற்றும் எதிர்பார்க்காத விக்ரோறியா திகைத்துப் போனாள். ஆனால் அந்த இடத்தில் ஏன் அப்படி செய்தாய் என்று கேட்க முடியாது. இருப்பினும் மனதில் ஒரு நெருடலுடன் தொடர்ந்து தன் கடமையில் கவனம் செலுத்தினாள். உணவுகள் பரிமாறிய பின்பு, தங்கள் முன் இருக்கும் உணவை எடுத்து சாப்பிட உதவி தேவைப்பட்டவர்களுக்கு தனித் தனியாக பராமரிப்பாளர்கள் போய் அவர்களின் அருகில் இருந்து உணவை மசித்து சேர்த்துக் கொடுப்பார்கள். சிலருக்கு ஊட்டி விடுவார்கள்.

தாரா மெரினாவின் அருகில் போய் உட்கார்ந்து கொண்டு மெரினாவின் உணவுத்தட்டில் இருந்த இறைச்சி உருண்டைகளையும் உருளைக் கிழங்கு துண்டுகளையும் கரண்டியின் பின்புறத்தால் அழுத்தி மசித்து மரக்கறிகளோடு சேர்த்து கொடுக்க மெரினா அமைதியாக அவற்றை கரண்டியால் எடுத்து உண்ணதொடங்கினார். 'கத்தி முள்ளுக்கரண்டி கொண்டு அவற்றை இலகுவாக வெட்டி மசித்து கொடுக்கலாமே! தாரா தன் கையில் இருந்த கத்தியையும் முள்ளுக்கரண்டியையும் வேகமாக பறித்தவள் அதை ஏன் கத்தியை மட்டும் பயன்படுத்தாமல் வெறும் கரண்டியால் மசித்துக் கொடுக்கிறாள்?' என்ற கேள்வி விக்ரோறியா மனதில் கேள்விக் குறியாக தனக்குள் எழ தொடர்ந்து தன் வேலைகளோடு நேரத்தையும் கவனித்தாள். மணிக்கூடு நேரம் ஒன்று முப்பதை நோக்கி செல்வதை காட்டியது

இன்று விக்கிறோரியாவின் கடமை நேரம், காலை ஆறு மணியில் இருந்து மதியம் இரண்டுமணிவரை. அவள் வேகமாகத் தன் கடமைகளை முடித்துக் கொண்டு உடைமாற்றிக் கொண்டு வீட்டுக்கு திரும்ப வேண்டும். அடுத்த நாளும் இதே நேர அட்டவணையில் தான் அவளுக்கு வேலை. அதன் பின் இரண்டு நாட்கள் லீவு. மறுநாள் வேலைக்கு வந்த விக்ரோறியா தாராவை தேடினாள். தாரா வரவில்லை. பராமரிப்பாளரின் கடமைகள் குறிக்கும் நேர அட்டவணையில் தாராவின் பெயரில் இரண்டு நாட்கள் ஒய்வு என்று காட்டியது. விக்ரோறியா வழமைபோல் அன்றைய நாள் கடமைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டாள். மறுநாள் ஒய்வில் வீட்டில் இருக்கும் போது மாலை ஆறு மணியளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிப்பு இல்லத்தில் இருந்து அவளுக்கு அழைப்பு வர எடுத்து பேசினாள். மறுமுனையில் அவளது தலைமை பொறுப்பாளர் பேசினார். நாளை ஓய்வு நாள் முடிந்தபின் காலை ஆறுமணிக்கு வேலைக்கு போக வேண்டியவளை இரவு வேலை செய்ய வர முடியுமா என கேட்டார். அவள் வேலைக்கு புதிது அதனால் அவள் கூட வேலை செய்யப் போகும் பராமரிப்பாளர் அனுபவம் உள்ளவர் அவர்கூட வேலை செய்வதால் அவளுக்கு சிரமம் இருக்காது என்றும் வேலைகளை புரிந்து கற்றுக்கொள்ள வாய்ப்பாகவும் இருக்கும் என்றும் தலைமை பொறுப்பதிகாரி சொன்னார். விக்கிறோரியா தான் இரவு வேலைக்கு வருவதாக ஒப்புக் கொண்டாள். இரவு எட்டு மணியில் இருந்து மறுநாள் காலை ஆறுமணிவரை கடமை நேரம் என்றும் ஏழரை மணிக்கே வந்துவிட வேண்டும்என்று சொல்லி தொலைபேசியை துண்டித்துக் கொண்டார்.



மாலை சரியாக ஏழு மணிக்கு பராமரிப்பு இல்லத்துக்குள் நுழைந்து சீருடையை அணிந்துகொண்டு அலுவலக அறையில் நிகழ்த்தப்படும் இருப்பது நிமிட கலந்துரையாடலில் ஏழரை மணிக்கு சேர்ந்து கொண்டாள். கடமையில் இருந்து விடுபடும் பகல் பராமரிப்பாளர்கள் அன்று அங்கு இருக்கும் குடியிருப்பாளர்களுக்கு என்ன நடந்தது, மருந்துகள் கொடுத்த விபரம், அவர்களின் உடல் நலம் மனநலம் போன்ற விபரங்களையும் மாலை எட்டு மணிக்கு கடமை ஏற்கும் பராமரிப் பாளர்களுக்கு விபரிப்பார்கள். சில குடியிருப்பா ளர்கள் மாலை ஏழுமணிக்கு முன்பு படுக்கைக்கு சென்று விடுவார்கள். அவர்களை தவிர எட்டு மணிக்கு பின் படுக்கைக்கு செல்ல விரும்புவார்கள். அங்கே கூடத்தில் காத்திருப்பதையும் அவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு சொல்லிவிட்டு தங்கள் பணியில் இருந்து விடுப்பட்டுக் கொண்டார்கள். இரவு வேலை செய்பவர்கள் பணிக்கு எண்ணிக்கையில் குறைவாக இருப்பதனால் எல்லோரும் கலந்துரையாடி தங்கள் முன் இருக்கும் கடமைகளை தங்களுக்குள் பேசி பிரித்துக்கொண்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது படுக்கைக்கு செல்ல காத்து இருப்பவர்களில் சிலரை சிறு மின் தூக்கிகளின் துணை கொண்டும், சிலரை சக்கரநாற்காலியில் வைத்துத் தள்ளிக் கொண்டு அவரவர்களின் படுக்கை அறைக்கு எடுத்து செல்ல வேண்டும். எட்டு மணிக்குப் பின் படுக்கைக்கு செல்லும் சிலரில் மெரினாவும் இருந்தார். விக்ரோறியாவோடு கூட வேலை செய்ய வந்த பராமரிப்பாளர் லீஸா விக்றேரியா விடம் ''மெரீனாவும் செரினும் ஒரே அறையில் இருப்பவர்கள். நீ மெரீனாவை அழைத்துக்கொண்டு வா நான் செரினை அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லியபடி ,

லீஸா விக்ரோறியாவோடு முதலில் மெரினாவின் பக்கம் சென்று. மெரினாவிடம் மாலை வணக்கம் தெரிவித்து விட்டு அவளுக்கு விக்ரோறியாவை அறிமுகம் செய்து வைத்தபின் விக்ரோறியா உங்களை படுக்கைக்கு அழைத்து செல்வார் அவரோடு படுக்கை அறைக்கு போக சம்மதமா? என்று கேட்டாள். மெரினாவும் புன்னகைத்தபடி தலையாட்டினார். 'அவரது மேசையின் மேல் ஒரு சிறிய கை பையில், சின்னபல் சீப்பு, முகம் பார்க்கும் சிறிய கண்ணாடி பொன்ஸ் பவுடரின் சின்ன பிஸ்கெற் பக்கெற் குழந்தைகளுக்கு கழுத்தில் கட்டும் துண்டும் ஒரு சிறிய சூப்பிப்போத்தல், அரையடி உயரமான வெதுவெதுப்பான சுடு நீர் போத்தலும். அவரது மடியில் ஒரு அடி உயரம்கொண்ட அழகான பொம்மையும் இருந்தது. அதன் பெயர் யூலி என்றும் அதற்கு சொந்தமான பொருட்கள் கைப்பையில் இருப்பதாயும் போகும் போது அவற்றையும் யூலியையும் மெரினாவோடு எடுத்து செல்லும்படியும் கூறிவிட்டு லீஸா செரின் பக்கம் சென்றாள். விக்ரோறியாவும் லீஸாவும் ஒரே நேரத்தில் இருவரையும் அவரவர்களின் சக்கரநாற்காலியில் இருத்தி அவர்களது அறைக்கு இட்டு சென்றார்கள். கதவின் முதல் படுக்கை மெரினாவினுடையது. மெரினா சில அடிகள் நாற்காலியை விட்டு எழுந்து மற்றவர்களின் உதவியோடு நடக்கக்கூடியவர். அவரை கை பிடித்து குளியலறைக்கு அழைத்து வந்து வெதுவெதுப்பான நீரில் சுத்தம் செய்து pads,யும் அணிவித்து அவரது கட்டுப் பல்லை வாங்கி ஒரு நீர்கொண்ட குவளையில் இட்ட பின் சொகுசாக படுக்கையில் படுக்கவைத்து அவரது போர்வையை விக்ரோறியா கழுத்துத்துவரை இழுத்து போர்த்தி விட போன போது லீஸா விரைந்து வந்து விக்ரோறியாவிடம் போர்வையை இடுப்புவரை இழுத்து விட்டு அருகே யூலி பொம்மையை படுக்க வைக்கும்படி சொன்னாள். கட்டில் பாது காப்பு சட்டத்தை உயர்த்த வேண்டாம் என்றும் சொன்னாள். பின் லீஸா அறை யன்னல்களை எல்லாம் மூடி மேல் சாளரத்தை சிறுக திறந்து விட்ட பின் மெரினாவின் பக்கம் வந்து கதவை அகலத் திறந்து அதன் கீழ் ஒரு தடையை வைத்து விட்டு மெரினாவிடம் வந்து விக்ரோறியாவின் சேவை உனக்கு பிடித்துள்ளதா? என்றும் அன்றைய நாள் பற்றி சில வார்த்தைகள் பேசி, புன்னகையோடு விசாரித்து விட்டு மெரினாவின் அவசர அழைப்பு மணியை எடுத்து அவரது தலையணையோடு பார்வைக்கு தெரியும்படி வைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு இருவரும் வெளியேறினார்கள். அறையை விட்டு வெளியே வந்த லீஸா மெதுவான குரலில் "மெரினா படுக்கைக்கு போகும்போது எந்த தடுப்புக்களும் இருக்க கூடாது. அப்படி இருந்தால் தன்னை அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று அழுது ஆர்ப்பாட்டம் செய்வார். அதனால்தான் போர்வையை கழுத்துவரை போர்க்காமலும்,கதவை அகல திறந்து வைத்திருக்க வேண்டும் " என்று சொல்லியபடி நடந்தாள். எல்லோரும் குறிப்பிட்ட நேரத்தில் படுக்கைக்கு சென்றுவிட்டார்கள். இல்லம் மங்கல் வெளிச்சத்தில் அமைதியாக காணப்பட்டது. இன்னும் சில வேலைகள் அவர்களுக்காக காத்து இருந்தன. பராமரிப்பாளர்களின் பிரத்தியேக அறையில் 15 நிமிடங்கள் ஓய்வு எடுக்கும் நேரம் வரும் போது லீஸாவிடம் மெரினா பற்றி இன்னும் கேட்டு தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு தன் மிகுதி வேலைகளையும் முடித்துக்கொண்டு பதினோரு மணியளவில் ஓய்வு அறைக்கு வந்தவளை 'தலைமை பொறுப்பதிகாரி' அவளைத் தன் அறைக்கு வரும்படி சொன்னதாக சொன்னார்கள். விக்ரோறியா அதைக் கேட்டு அவரது அறைக்கு சென்றாள். அவளைக்கண்டதும் புன்னகையோடு உள்ளேவரும்படி அழைத்து தன் முன் இருக்கையில் அமரும்படி கூறினார். முதலில் அவளுக்கு இந்தவேலை பிடித்து இருக்கிறதா?என்றும் அவளின் குடும்பம்,கடமைக்கு வருவதற்கான போக்குவரத்து வசதிகள் பற்றியும் விசாரித்துவிட்டு நாளைக்கும் இரவு வேலை செய்யமுடியுமா என்பதையும் வினாவினார். மூன்றுநிமிட உரையாடலின்பின் விக்ரோறியா அவரிடம் இருந்து விடை பெறும் போது அவள் கையில் ஒரு கோப்பு(பைல்) ஒன்றை கொடுத்து . இதை நன்கு படித்து விளங்கிக்கொள்ளும். விளங்காததை தயங்காமல் என்னிடம் கேளும். என்று சொன்னதும் விக்ரோறியா பைலை வாங்கி அதன்மேல் உள்ள பெயரைக் கவனித்தாள். 'திருமதி மெரினா ஜாஜ்' என்று எழுதி இருந்தது. அதை தன்னோடு எடுத்துக்கொண்டு போய் தன் அறை மேசைமீது வைத்து விட்டு. அங்கே இருந்த சூடான காப்பியை தன்கோப்பையில் ஊற்றிக்கொண்டு வந்து அமர்ந்தாள். சில நிடங்கள் சென்று இருக்காது,பெரும் அலறல் சத்தம்கேட்டு அதிர்ந்து போனாள். அவசரமணியை அழுத்தினால் அது எந்த கட்டில் என்பதை தெரிந்துகொள்ளலாம். ஆனால் இந்த சத்தம் எங்கு இருந்து வருகிறது என்று யோசிப்பதற்கு முன் லீஸா விக்ரோறியாவின் கைகளை தட்டி'வா' என்று சைகை செய்து கொண்டு வேகமாக நடக்க விக்ரோறியா பின் தொடர்ந்தாள்.

மெரினாவின் அறைக்கு இருவரும் விரைவாக ஓடிவர மெரினா அவரின் கட்டில் மேல் இருந்தபடியே தன் கைகளால் தலையில் பலமாக அடித்தடித்து அலறிக்கொண்டு இருந்தார். லீஸா அவரின் அருகில் சென்று "மெரினா" என்று குரல் கொடுத்தத்தும் இன்னும் சத்தமாக அழுதார். லீஸா அவரை அணைத்தபடி என்ன நடந்தது என்று வினவ "மூன்றுபேர் வந்து என்னை அடித்து என்னுடைய தலையில் வாளி வாளியாக தண்ணீரை ஊற்றி. என் உடைகளை கிழித்து கத்தியை காட்டி என்னை மாறி மாறி சீரழித்தார்கள். என் யூலியை பறித்து இழுத்து கீழே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு காலால் மிதிக்கிறார்கள்" என்று பயத்தில் உதடுகள் படபடக்க பேசினார். கண்களில் நீர் தாரை தாரையாக ஓடியது. அவரின் மெல்லியஉடல் பயத்தால் உதறல் எடுத்து காணப்பட்டது.

லீஸா அவரின் பக்கத்தில் கிடத்தி இருந்த யூலியை எடுத்து அவர் கையில் கொடுத்து "இங்கே பார் யூலிக்கு ஒன்றும் நடக்கவில்லை. உன் உடைகள் நனையவில்லை. நீ எங்களுடன் இருக்கிறாய். இங்கு யாரும் உள்ளே வரமுடியாது. வெளியில் போலீஸ் காவல் இருக்கிறது. அமைதியாக படு" என்று மெதுவாக தன் கைகளால் அணைத்து முதுகை தடவிக்கொண்டே ஆறுதல் படுத்தினாள். மெரினா சிறிது நேரத்துக்குப்பின் அழுகைநின்றதும், அவரின் மேசையில் இருந்த வெந்நீர் போத்தலில் இருந்து நீர்வார்த்து குடிக்க கொடுத்துவிட்டு, பதட்டம் குறைந்து அமைதியாகி உறங்கும் மனநிலைக்கு வரும்வரை இருவரும் அங்கேயே இருந்து அவரை ஆறுதல் படுத்தி, யூலி பொம்மையை அருகே கிடத்தி அவரை கையை எடுத்து யூலியை அணைத்தபடி வளைத்து வைக்க சில நிமிடங்களில் மெரினா அமைதியாக உறங்கியது இருவரும் அறைக்கு திரும்பினர்.

விக்ரோறியா வயோதிபரின் பராமரிப்பு முதலுதவி, அவர்களின் குணநல மாற்றங்கள் போன்ற விபரங்கள், அவர்களை எப்படி பராமரிக்க வேண்டும், பிரச்சனையான நேரங்களில் எப்படி அவர்களோடு நடந்துகொள்ள வேண்டும் என்பவற்றைப் படித்து ஓரளவு தேர்ச்சியும் பயிற்ச்சி எடுத்துக்கொண்டு தான் வேலையில் சேர்ந்தவள். ஒவ்வொரு வயோதிப தாய் தந்தையர்களின் பின் பெரும் கதைகள் இருக்கிறது. விக்ரோறியா, மெரினாவின் கதையை அறிய அவரின் கோப்பை திறந்தாள். அதில் மெரினா இந்த இல்லத்துக்கு வரமுன்பு அவரை பராமரித்த' மிஸ் எலெக்ரா' என்ற காப்பாளர் எழுதி வைத்த குறிப்பு இருந்தது. அதன் சாராம்சம்

"மெரினா போலந்து நாட்டை சேர்ந்தவர். அவர்களின் நாடு யுத்தத்தின் போது அவர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு சொந்த மொழியின் பேச்சு சுதந்திரம் மறுக்கப்பட்டு எதிலிகளாக சிதறி ஓடிய குடும்பத்தில் பிறந்தவர். யுத்தம் ஓய்ந்த பின்பும் அந்த நாட்டில் நிலைகொண்டிருந்த துருப்புக்களால் ஒன்பது வயது சிறுமி மெரினா தொடர் கூட்டு பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தபடுகிறாள். அந்த நாட்டில் அப்போது இயங்கிக் கொண்டு இருந்த மக்கள்உதவி மையங்களின் (NGO) உதவியால் மீட்கப்பட்டு பிரித்தானியாவுக்கு அழைத்து வரப்படுகிறார். அங்கே ஆதரவற்ற குழந்தைகளின் இல்லத்தில் வளர்ந்தவள் பதினெட்டு வயது வந்தபின் இல்லத்தை விட்டு வெளியேறி சிறு தொழில் தேடி தன்னை தானே தனியனாக பராமரித்துக்கொண்டாள். சிறுவயதில் அவளுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் ஆண்வர்க்கத்தையே அடியோடு வெறுக்க வைத்தது. அதன்படி ஆண்களிடம் இருந்து ஒதுங்கி வாழ்ந்தவள், அவளது முப்பத்தைந்துதாவது வயதில் ஜாஜை சந்திக்கிறாள். அவன் மெரினாவின் முழு கதையையும் கேட்டு தெரிந்த பின்பு அவள்மேல் காட்டிய கருணையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் அவளுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பைக் கொடுக்க இருவரும் விவாகம் செய்து கொள்கின்றனர். இரண்டு வருடங்கள் கழித்து ஒரு பெண்குழந்தை பிறக்கிறது. அதற்கு ஒருவயது வருமுன்பே ஜாஜ் மார்படைப்பால் இறந்து விடுகிறான். மெரினா ஒருவயது குழந்தை யூலியுடன் மீண்டும் அனாதையாக்கப் படுகிறாள். இரும்பு ஆணிகள் செய்யும் கம்பெனி ஒன்றில் வேலைக்கு சேர்ந்து தன் குழந்தை யூலியை பொன்போல் பொத்தி வளர்க்கிறாள். தனக்கு நேர்ந்த துயரங்கள் தன் பிள்ளைக்கு வராதபடி அரண் போட்டு பாதுகாக்கிறாள். பருவம் வந்த யூலி தன் தாயின் கட்டுப்படுத்தும் செயல்களால் ஆத்திரம் அடைகிறாள். எந்த ஒரு ஆண்நண்பர்களும் வீட்டுக்கு வர மெரினா அனுமதிப்பதில்லை. தான் பட்ட துயரங்கள் வேதனைகளை மகளுக்கு விளங்கப்படுத்தியும் அதை விளங்கிக்கொள்ள விரும்பாத மகள் யூலி சுதந்திரம் தேடி ஒரு நாள் வீட்டை விட்டு வெளியேறி கண்ணுக்கு எட்டா தூரத்துக்கு அப்பால் காணாமலே போய் விட்டாள். இன்று மெரினா நோய்வாய்ப்பட்டு தொய்ந்து போன உடலோடும் குதறி கிழிக்கப்பட்ட மனதோடும் ஒன்பது வயது சிறுமியைப் போல் யூலி பொம்மையை அணைத்தபடி வாழ்கிறாள்".

இதை வாசித்த விக்ரோறியா ஆழ்ந்த பெருமூச்சு விட்டபடி பைலை மூடிவிட்டு, கனத்த இதயத்தோடு இன்றும் எங்கள் நாட்டில் மட்டுமல்ல யுத்தத்தின் பாதிப்பில் படைகள் போராளிகள் கொல்லப்படுகின்றனர். அது யுத்தத்தின் விதி. ஆனால் அப்பாவி பெண்களும் சிறுவர் சிறுமிகள் குழந்தைகள் சீரழிக்கப்படுவதும் அதன் அனர்த்தத்தில் இருந்து விடுபட முடியாத வெறும் எலும்புக்கூடுகள் போல் வாழ்ந்து மடிவதும் எந்த விதியில் சேர்க்கமுடியும்?. பொங்கிய கண்ணீரை துடைத்தபடி தொடர்ந்து தன் மிகுதியான வேலைகளை பார்க்க எழுந்து கொண்டாள். நேரம் காலை நான்கு மணி இருக்கும் விக்ரோறியாவும் லீஸாவும் இல்லத்தில் உறங்கிக்கொண்டு இருக்கும் தங்களின் பொறுப்பில் இருக்கும் குடியிருப்பாளர்களை பார்வை இட வேண்டும். அப்படியே வந்து கொண்டு இருக்கும்போது மெரினாவின் அறையை எட்டிப்பார்த்தார்கள். அங்கே மெரினா யூலிப்பொம்மையை இறுக்கி அணைத்தபடி அமைதியாக உறங்கிக்கொண்டு இருந்தார். அருகே சென்று பார்த்தபோது அசைவற்று இருப்பதுபோல் காணப்பட, லீஸா அவரை மெதுவாக தொட்டுப் பார்த்தவள். அதிர்ச்சியில் உறைந்து விட்டள். மெரினா இறந்து கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலங்கள் ஆகி இருக்கும். உடல் விறைப்புத்தன்மை கண்டிருந்தது.

லீஸா துக்கம் தொண்டையை இறுக்க சொன்னாள் "ஒரு எலும்புக்கூடு கழுமரம் எறிக்கொண்டது". இருவரின் கண்களிலும் நீர் முற்றுப்புள்ளிகள் போல் உருண்டோடின.

## துறவு

துறவு எந்தத் திட்டமிடலிலும் அடங்காதது. அது இயல்பானது. இலக்கற்றது. மிகப் பெரிய சரணாகதி . பூர்வ ஜென்ம வாசனை அது . இலக்கில்லாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் சமரன்

# கொன்றது கொரோணா

தலையில் கட்டியிருந்த துண்டை உதறி முகத்தைத் துடைத்துக் கொண்டு அருகிலிருந்த நடராசாவிடம் பேச்சுக் கொடுத்தார் முருகன்.

"போன வருஷம் இந்த கொரோணா தொல்லையால நம்ம கோயில் திருவிழா நடத்த இயலாம போயிட்டு இந்த முறை யாவது நடத்துவதற்கு அனுமதி கிடைக் கிற சந்தர்ப்பம் இருக்கிறதால, கோயில் தலைவர் சொன்னபடி நம்ம மாரியம்மன் இல்லெண்டா இந்த முறையும் மழை பெய்யாம விட்டிரும்"

"இந்த முறை திருவிழா நடந்தாலே போதும் சாமி எனக்கு, எல்லாம் அந்த மாரியம்மா கையிலதான் இருக்கு"

" ம்ம்...எல்லாம் நல்லதாவே நடக்கும் எண்டு நம்புவோம், எடு அந்த குப்பை வாரிய, இங்க இருக்கிறத இழுத்து பத்த வைப்பம்"

என்று இருவரும் பேசியது என்



திருகோணமலையைச் சேர்ந்த இவர் ஒரு கவிஞராக இலக்கிய உலகில் புகுந்து சிறுகதையாளனாக மாறியுள்ளார். கிழக்குப் பல்கலைக் கழகப் பட்டதாரியான இவர் சமூகப் பிரச்சினைகளை சல்லடைபோட்டு மக்களுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டும் பல சிறுகதைகளை மஞ்சரியில் எழுதியுள்ளார்.

திருக்கோயில சுத்தப்படுத்திட்டு இருக்கம்"

"ஓமடா முருகா போன வருஷம் திருவிழா இல்லாம ஊரே வெறிச்சோடி கிடந்தது. போன மாரி மழை கூட சரியாக பெய்யல, இந்தமுறை கொஞ்சப் பேரோட செய்யட்டாம் என்று அரசாங்கம் சொல்லி ருக்கு நமக்கு அப்படி அனுமதி கிடைச்சா நல்லம்தானே இப்ப கொரோணா கொஞ் சம் குறைஞ்சிருக்கு அதனால மாரியம்மன் திருவிழாவை நல்லா நடத்திடனும்,

காதில் விழுந்தது. திருவிழாவை முன் னிட்டு ஊரில் உள்ள மாரியம்மன் கோயிலில் ஊரவர் அனைவரும் சேர்ந்து சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள், நானும் ஊரவன் என்ற முறையில் எனது பங்கிற்கு கோயில் பிரகாரத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தேன். இந்த கொரோணா காலத்தில திருவிழா தேவை தானா? என்ற எண்ணம் மனசுக்குள்ள ஓடிக்கொண்டே இருந்தது. எல்லா மக்களும் ஒன்றுகூடி திருவிழாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொற்று அதிகமானால் பாதிக்கப் படப் போவது நமது மக்கள் தானே? இருந் தாலும் நான்சிறியவன் பதினொரு வயதுப் பிள்ளை என்றால் பக்கத்து வீட்டு பிள் ளைகளுடன் விளையாடு, பாராளும் ராசா போல எல்லாம் தெரிஞ்ச மாதிரி பேசக் கூடாது என் பார்கள். அறிவு என் பது சின்னவங்க பெரியவங்க என்றா! இருக்கும். எனக்கு விளையாடுவதை விட பழைய கதை கள், வரலாற்று தகவல்கள் கேட்பது பிடிக்கும், அது தொடர்பாக தேடி வாசிப்பது என்று எப்பொழுதும் இருப் பேன். அப்படியான நிலையில் எனக்கு அந்த தேவையை பூர்த்தி செய்து எனக்கு நிறைய கதைகள் சொல்ல கந்தசாமி தாத்தா இருக்கிறார். அவர் காலத்தில் நடந்த விஷயங்கள், ஊர் நடைமுறைகள், அவரின் வாழ்க்கை அனுபவங்கள் என்று பல விஷயங்களை அவரிடமிருந்து நான் தெரிந்து கொள் வேன்.

கந்தசாமி தாத்தா எங்க மாரியம்மன் கோவிலதான் பெரும்பாலும் இருப்பார். அவருக்கு சொந்தகாரங்க என்று யாருமே இல்லை. தன்னால் முடிந்த அளவுக்கு உதவிகளை மற்றவங்களுக்கு செய்வார். கோயிலில் தினமும் பூசை நடக்கிறதால அங்க கிடைக்கிற பிரசாதத்தை தான் மூன்று வேளையும் சாப்பிடுவார். மற்றபடி ஊர்ல சில நல்ல உள்ளங்கள் அவருக்கு சாப்பாடு கொடுப் பாங்க, நானும் பல தடவைகள் அம்மா விடம் சொல்லி கந்தசாமி தாத்தா விற்கு சாப்பாடு கட்டிக் கொண்டு கொடுத்திருக்கி றேன். தாத்தா விற்கு என் மேல சரியான விருப்பம் நான் மற்ற பிள் ளைகளைப் போல விளையாட்டுத் தனமாய் இல்லாம அவர்கிட்ட எதை யாவது முக்கியமா னவை பற்றிக் கேட்டுக் கொண்டே இருப் பேன். அதை தெரிந்து கொள்வதில் ஆர்வமாக இருப்பேன் என்று அடிக்கடி சொல்லுவார்.

எங்க கிராமம் நகரத்திலிருந்து சுமார் முப்பது தொடக்கம் நாற்பது கிலோ மீட்டர்கள் தூரம் இருக்கும். அவசரத்துக்கு வைத்தியசாலை செல்வது என்றால் கூட கடினம். எல்லாம் இங்கே தாமதமாகவே நடைபெறும். ஒரு மாதிரியாக கோவில் தலைவர் குறைந்த எண்ணிக்கையான ஆட்களைக் கொண்டு வழமையான திருவிழா உற்சவத்தை போல இல்லாமல் சாதாரண சடங்கு போல இந்த முறை கோயில் உற்சவத்தை நடத்த உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெற்று இருப்ப தாக கூட்டம் ஒன்றினை ஒழுங்குபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் பேசினார். அதனால் இந்த முறை கோயில் உற்சவம் வழமை போல இருக்காது என அதில் இருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள்.

குழுக்களாக சிலரை பிரித்து உற்சவகால பணிகள் ஒப்படைக்கப்பட்டன. ஆயத்தங்கள் மும்முரமாக இடம்பெற்றன. கோயில் உற்சவத்தில் எல்லா பணிகளோடும் சம்பந்தப்பட்ட வராக கந்தசாமி தாத்தா இருந்தார். அவர் கோயில் பணிகளிலே இருப்பதனால் சில வேலைகள் செய்யும் போது அவருடைய ஆலோசனையைப் பெற்று செய்தார்கள். இப்போது அவரைக் காணவே கிடைக்கவில்லை. சரியான வேலைப் பளு அவருக்கு இருந்திருக்கும். நானும் அவரோடு பேசலாம் என்று அவர் வழமையாக உட்கார்ந்து இருக்கும் மரத்தடியில் போய் பார்ப்பேன். அவரில்லாமல் மரம் மட்டும் தனியே இருந்து யாரோடு நான் பேசுவேன் என குழம்பி அடிக்கும் காற்றில் அங்கும் இங்குமாக தலை அசைத்துக் கொண்டிருந்தது. நான் மரத்தின் அருகே சென்று தாத்தா எங்கே? எனக் கேட்டேன். மரம் பதில் எதுவும் சொல்லவில்லை, அதற்கும் என்னைப் போல் தாத்தாவை காணாமல் ஏக்கம் இருந்தது போல அது தான் அது ஒன்றுமே பேசவில்லை. எனக்கு அந்நேரம் அடக்க முடியாத சிரிப்பும் வந்தது, ஏனென்றால் எங்காவது மரம் பேசுமா? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை கொஞ்ச நேரம் மரத்தடியில் இருந்து விட்டு வீட்டுக்கு வந்து விட்டேன்.

சுமார் நான்கு வாரங்களாக உற்சவ ஆயத்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நானும் தாத்தாவுடன் பெரிதாக பேசிக் கொள்ள முடியவில்லை. அவர் கோயில் வேலையாக இருப்பதனால் பேச நேரம் கிடைக்கவில்லை என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டு எனது மனதை தேற்றிக்கொள்வேன். உற்சவ நாளன்று தடபுடலாக ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்தன. குறைந்த எண்ணிக்கையிலான ஆட்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்பதனால் இந்த முறை முக்கியமானவர்கள் மட்டுமே கோயில் நிர்வாகத்தினரால் அழைக்கப்பட்டிருந்தார்கள். கோயில் முகப்பில் சுகாதார வழிமுறைகளை கடைபிடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தங்கள் வீட்டிலிருந்து சுமார் ஆறு வீடுகள் தள்ளி மாரியம்மன் கோயில் இருந்தது. கோயிலுக்கு போவோர் வருவோரை வாசற்படியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். ஆறு நாட்களைக் கொண்ட உற்சவம் என்பதால் முதலிரண்டு நாட்கள் பெரிதாக ஆட்கள் செல்வதை காணவில்லை. கோயில் ஒலிபெருக்கியில் வேத மந்திரங்கள் ஒலிப்பது காதில் கேட்டுக் கொண்டே இருந்தது. அந்நேரங்களில் கந்தசாமி தாத்தா பூசகருக்கு உதவியாக இருந்து கொண்டிருப்பார் என என் மனதுக்குள் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தது. மனமும் கோயில் உற்சவத்தில் சுவாமியின் திருவுருவம் எவ்விதம் அலங்கரிக்கப்பட்டிருக்கும் எனவும் போன வருடத்துக்கு முந்தைய திருவிழாவில் பூந்தி மிட்டாய் வாங்கி சாப்பிட்ட நினைவும் அடிக்கடி எனக்குள் வந்து வந்து போனது.

ஒருவாறு ஐந்து நாட்கள் கடந்து விட்டன. கோயில் உற்சவத்தின் கடைசி நாளன்று முந்தைய நாட்களை விட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் வருகையானது மிகவும் அதிகரித்து இருந்தது. எங்கள் ஊர் ஆட்களோடு பக்கத்து ஊர்களிலுமிருந்து ஆட்கள் நிறைய பேர் வந்திருந்தார்கள். ஐந்து நாட்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளை பேணிய இவர்களுக்கு கடைசி ஒரு நாள் மட்டும் பொறுத்திருக்க முடியவில்லை போலும். நடமாடும் ஐஸ்கிரீம் விற்கும் வியாபாரிகள் கூட இரண்டு மூன்றுபேர் என்று முச்சக்கர வண்டிகளில் வந்து வந்து சென்றார்கள். இப்படியே கடைசி நாள் உற்சவம் அதிக எண்ணிக்கையான ஆட்களை கொண்டு நடைபெற்றது. உற்சவகால குழுவினர் எவ்வளவு தடுத்தும் கேட்கவில்லை. நாட்டின் அசாதாரண சூழலை கருத்தில் கொள்ளாமல் நடக்கும் முட்டாள்களை என்னவென்று திருத்துவது. ஒரு வழியாக கோயில் உற்சவம் முடிந்து விட்டது. இனி கந்தசாமி தாத்தாவோடு நான் பழையபடி உரையாடலாம் என்று நினைத்திருந்தேன், ஆனால் விதி வேறு மாதிரி நினைத்து விட்டது போல இரண்டு நாட்கள் கழித்து கோயில் பக்கம் போகலாம் என்று நான் வீட்டிற்கு வெளியே வரும் போது அப்பா பரபரப்பாக நடந்து வந்தார்.

"எங்க போற?"

"கோயிலுக்கு போறேன்பா, கந்தசாமி தாத்தாவ பாக்க"

"ஆஹ், கோயில் பக்கம் போயிடாத, திருவிழாவுக்கு வந்த ஆட்களுக்கு எல்லாம் கொரோனாவாம், கோயில் தலைவர் இப்பதான் சொல்லிட்டுப் போறார்"

"எப்படி வந்ததாம் அப்பா"

"பக்கத்து ஊர்க்காரங்க மூலமா பரவியிருக்கும் போல, நம்ம பெரியசாமி அண்ணனுக்கும் காய்ச்சலாம் எண்டாங்க, அதோட கந்தசாமி ஐயாவுக்கும் காய்ச்சலாம், அவர் உடம்பு முடியாமல் இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். அங்கால நீ போயிடாத"

"ஐயோ அப்பா! என்னது தாத்தாவுக்கு கொரோணாவா? அவருக்கு யாரும் இல்லையே, இப்போ கொரோனா எண்டா சாப்பாடு கொடுக்க கூட யாரும் கிட்ட போக மாட்டாங்க பாவம் தாத்தா"

என்று அழுதேன் அம்மாவும் அப்பாவும் கோயில் பக்கமே என்னை போகக் கூடாது என கண்டிப்பாக சொன்னார்கள். அதை மீறி போனால் அடி விழும், என்ன செய்வது என்றே தெரியவில்லை. வீட்டு நுழைவாயிலில் நின்று கொண்டு கோயிலை பார்த்துக் கொண்டிருந்தேன். "அம்மா தாயே மாரியம்மா! தாத்தாவுக்கு கொரோணா வந்திருக்கக் கூடாது. அவர் பாவம் நீ தான்மா காப்பாத்தணும்" என்று மனதார மாரியம்மனை வேண்டிக் கொண்டேன்.

கொரோணா பரிசோதனை செய்யும் அதிகாரிகள் வருவார்கள் என்று அப்பா சொல்லியிருந்தார். ஆனால் அவர்கள் உடனடியாக வரப்போவதில்லை என்று எனக்கு தெரியும். ஏனென்றால் எங்கள் ஊருக்கு வருவதற்கான பாதைகள் அவ்வளவு சரியாக இருக்காது. அதனால் ஒன்றரை நாட்கள் கழிந்துவிட்டன. அங்கே தாத்தா எவ்வளவு கஷ்டப்படுகிறாறோ! என மனம் பதைபதைத்தது. அன்று இரவு ஏழு மணியிருக்கும் எமது பொதுச்சுகாதார பிரிவுகுட்பட்ட வைத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசாலையின் அம்புலன்ஸ் வண்டி வேக மாக வந்து கொரோணா தொற்று உறுதி யானவர்களை ஏற்றிக்கொண்டு வேகமாக பறந்தது. கோயிலடியிலும் அந்த வாகனம் நிற்பதை நான் கவனித்தேன். அப்போது இன்னும் வழமைக்கு மாறாக ஆம்புலன்ஸ் மிக வேகமாக வைத்திய சாலையை நோக்கி செல்வதை கண்டேன். யாருக்கோ சரியான ஆபத்தான நிலை போல அதான் இவ்வளவு வேகமாக கொண்டு செல்கி றார்கள் என அம்மா சொன்னது. காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல இருந்தது. மனம் துடித்தது கண்கள் கலங்கியது. ஐயோ என அழுது விட்டேன். தாத்தாவிடம் நான் பேசிய பொழுதுகள் என் கண்ணின் முன்னே வந்து வந்து சென்றன. அழுகையை அடக்க முடிய வில்லை படுக்கை அறையின் மூலையில் அழுது கொண்டே அன்றிரவு சாப்பாடு கூட உண்ணாமல் அசந்து அப்படியே உறங்கிவிட்டேன். காலையில் எழுந்து முகம் கழுவி அம்மா தந்த தேனீரை நான் வாங்கிக் கொண்டிருந்த போது அப்பா வந்து அம்மாவிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

"நேற்று அம்புலன்ஸில சீரியஸ் என்று கொண்டு போனது நம்ம கந்தசாமி ஐயாவயாம்"

"அப்படியா பாவம் அந்த மனுஷன் கோயிலே கதியெண்டு கிடப்பார், அவ ருக்கு கொரோனா வந்திருக்கு பாருங் களன்"

"இல்ல தேவி, அவருக்கு கொரோணா இல்ல அவர் செத்திட்டார் என்று சொல்லி சேதி வந்திருக்கு, ஆனால் கொரோனாவில சாகலயாம்"

"ஐயோ! அப்போ எப்படி அவர் மோசம் போனார்?"

"அவருக்கு ஏற்கனவே பிறசர் வருத்தம் இருந்ததாம், அதை விட அன்று அவருக்கு நெஞ்சுவலி வந்திருக்கு போல, மனிதன் ஏலாம கிடந்திருக்கிறார், நம்ம சனங்க அவருக்கு கொரோனா என்று கதையைக் கட்டி விட்டதால அவரை யாருமே கவனிக்க போகல, யாருமே அவரை போய் எட்டி கூட பார்க்கவயில்ல, பாவம் மனுஷன் தனியா கிடந்து அவதிப்பட்டு சாகிற நிலையில்தான் ஆம்புலன்சில ஏத்தி போயிருக்காங்க, அதனால இடையிலேயே அவர் செத் துட்டாராம்"

"ம்ம் ஒரு மனிசன் தனிய கஷ்டப்ப டுறத பார்த்திட்டு இந்த சனங்கள் இருந் திருக்கு, சமூகத்தில இப்ப மனிதாபிமானம் இல்லாம போய்ற்று, என்ன பரிதாபம் நம்ம கூட அவர போயிட்டு பார்க்கலையே, நேற்று இரவில இருந்து நம்ம தம்பி கூட கந்தசாமி ஐயாவைத்தான் கேட்டு அழு துட்டே இருந்தான், இப்பதான் தேத் தண்ணி கொடுக்கிறேன் அதுக்குள்ளே இப்படி ஒரு விஷயத்தை வந்து சொல்றீங்க"

அம்மா கொடுத்த தேநீர் குவளை கையில் இருந்து நழுவியது கூட எனக்கு தெரிய வில்லை. நெஞ்சு பதை பதைத்தது. விம்மி விம்மி அழுகைதான் வந்தது. அம்மா ஆறுதல் சொல்ல அருகே வந்தாள். அம்மாவை தள்ளிவிட்டு கோயிலுக்கு ஓடினேன். அங்கே தாத்தாவை நான் வழமையாக சந்தித்துப் பேசும் மரத்தடிக்கு நேராக ஓடினேன். அந்த நிழலில் விழுந் தேன். எனக்கு முன்னமே அந்த வேப்ப மரத்திற்கு தாத்தா இறந்த செய்தி கிடைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கும் போல அதன் உடலான தண்டி லிருந்து கண்ணீராக பிசின்கள் (வேப்பமரத்தின் பட்டையை சீவினால் அவ் விடத்தில் வரும் பசை போன்ற திரவம்) வடிந்து கொண்டிருந்தது.

மரத்திற்கே இவ்வளவு வருத்தம் இருக்கும் போது, எனக்கு மட்டும் இருக்காதா? தாத்தா நடந்து உலாவிய அவ்விடத்து மண்ணை எடுத்து முகத்தில் அடித்து அழுதேன், என்னால் அழுகையை கட்டுப் படுத்த முடியவில்லை. மீண்டும் மீண்டும் தாத்தாவின் நினைவே வந்தது, வானமே இடிந்து என் மேல் விழுந்தது போல இருந்தது. தேற்றுவதற்கு கூட ஆளில்லாமல் மரத்தடியில் அழுது புரண்டேன். தாத்தாவின் மரணத்திற்கான காரணத்தை நினைக்கும் போது கோபம் தலைக்கேறியது. அறிவற்ற முட்டாள் மக்கள் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எவ்வளவு சொல்லியும் கேட்காமல் சுகாதார நடைமுறைகளை மீறி கோயில் உற்சவத்தில் கலந்து கொண்டு எங்கோ இருந்த கொரோணாவை இங்கு கொண்டு வந்து விட்டார்கள். எல்லோருக்கும் நோய் தொற்றி விட்டால் பாதிக்கப் படப் போவது நமது சமூகம்தானே என்ற அக்கறையோ, சிந்தனையோ இல்லாமல் நடந்து கொண்டார்களே இவர்கள். பொறுப்பில்லாமல் அநியாயமாக கொரோணா பீதியை மக்களுக்கு ஏற்படுத்தியதன் விளைவாக இன்று எனது கந்தசாமி தாத்தாவை நான் இழந்து விட்டேன்.

எனது தாத்தா அறிவுள்ளவர், அதனால்தான் அவ்வளவு பேர் கோயில் உற்சவத்தில் கலந்து கொண்டிருந்தும் கூட அவர் பாதுகாப்பாக இருந்திருக்கிறார். அவர் பாதுகாப்பாக சுகாதார நடைமுறையை சுயமாக பேணியிருந்ததன் காரணமாக தான் அவரை கொரோணா வால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. இல்லையென்றால் வயதான அவருக்கு இலகுவாக தொற்று ஏற்பட்டிருக்கும். தாத்தாவிற்கு இருந்த உயர்குருதி அமுக்கம் மற்றும் வயது மூப்பு காரணமாக தான் அவர் இறந்து விட்டார். இருந்தாலும் சரியான நேரத்தில் அவருக்கு யாராவது வைத்திய சிகிச்சை அளித்திருந்தால், இன்னும் பல நாட்கள் என்னோடு இருந்திருப்பார். கொரோணாவால் தாத்தாவை ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதால் எல்லோரிடமும் அதன் பீதியை ஏற்படுத்தி தாத்தாவிடம் யாரையும் நெருங்க விடாமல் செய்துவிட்டது. கொரோணாவை வென்ற தாத்தாவிற்கு தனது மரணத்தை வெல்ல முடியவில்லை. எப்படியோ மரணத்தின் தற்போதைய ஏகபிரதிநிதி கொரோணா என்பதால் தாத்தாவின் மரணத்திற்கு உரிமை கோரி விட்டது. இதில் என்ன விசித்திரம் என்றால் நோய்த்தொற்று இல்லாமல் நோய்த்தொற்று இருக்குமோ? என்ற ஐயமே அவரை நாம் பறிகொடுக்க காரணமாகிவிட்டது. நேற்று எம்மோடு இருந்தவர் இன்றில்லை, எல்லாம் கொரோணா தந்த பரிசு. எனது மனதில் இவ்வாறு எண்ணங்கள் உதித்து மறைந்து கொண்டிருந்தன. இருந்தாலும் நான் கொரோணாவை வன்மையாக கண்டிக்கிறேன். என்னை அது அணைக்கும் நாள் வெகு தொலைவில் உள்ளது என்பதை உணர்த்தியவனாக...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ............. இதுதான் நட்பா?

அவர்கள்இருவரும் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர்ந்த பின்புதான் நண்பர்களானார்கள். ஆரம்பத்தில் இருவரும் இணைபிரியாத நண்பர்களாகத்தான் இருந்தார்கள். இருவரும் இணைந்து தான் தங்களது அன்றாட வேலைகளைச் செய்து கொள்வார்கள். அவர்களின் நெருக்கத்தினைப் பார்த்துப் பலர் பொறாமைப்பட்டதுண்டு. சிலர் அவர்களைப் போல் பழக நினைத்ததுண்டு. ஆனாலும் அவர்களைப் போல் பழக இவர்களால் முடியவில்லை.

ஒருநாள் இருவரில் ஒருத்திக்கு தீராத தலைவலி. தலைவலியோடு சேர்த்து காய்ச்சல் கூட வந்துவிட்டது. அப்போது மற்றவள்தான் அருகில் இருந்து தாயைப் போல் உபசரித்தாள்.





**அஷ்வினி வையந்தி**

திருகோணமலையைச் சேர்ந்த இளம் கவிதாயினி. கவிதைகள் எழுதுவதே இவரது இலக்கியப் பிரவேசமாக இருந்தாலும் சிறுகதை எழுதுவதிலும் விமர்சனம் எழுதுவதிலும் தன் முத்திரையைப் பதித்து வருகிறார். சிறுகதை மஞ்சரியில் பல சிறுகதைகளை எழுதியுள்ளார். தற்போது கிழக்கு பல்கலையில் உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பிறகு இருவரும் இன்னும் அதிகமாக நெருக்கமானர்கள். குடும் பத்தைப் பற்றியோ, தங்கள் மீது விமர் சனங்களை முன்வைப்பவர் பற்றியோ அவர்கள் சிந்திக்கவில்லை. தங்களைப் பற்றியும், தங்களது படிப்பு பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். எப் போதும் மகிழ்ச்சியாகவே இருந்தார்கள்.

எல்லோரிடமும் அன்பாகப் பழ கினார்கள். விரும்பியஇடங்களுக்கு சென்று வந்தார்கள். விரும்பிய பொருட் களை வாங்கிக்கொண்டார்கள். விரும் பிய வாழ்க்கை எத்தனை பேருக் குத்தான் கிடைக்கப்போகின்றது? ஆனால் இவர்களுக்கு கிடைத்தது. அதற் காக கடவு ளுக்கு நன்றி சொல்லிக் கொண் டார்கள். இப்படியே எங்கள் இருவரது நட்பையும் நிலைநிறுத்திவிடு என கடவுளிடம் மண்டாடிக் கொண் டார் கள்.

நெருக்கமான சூழ்நிலைகளின் போது ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருந்தார்கள். தங்களது நட்பைப் பிரிக்க நினைக்கும் எல்லோரையும் விட்டு ஒதுங்கி வந்தார்கள். அதில் ஒருத்தி நேருக்கு நேர் பேசும் குணமிக்கவள். மற்றவளைப் பற்றி யாரேனும் ஏதேனும் கதைத்தால் இவளுக்கு கோபம் வந்து விடும். உடனே கதைத்தவரை ஒருவழி பண்ணிவிடுவாள். உங்கள் பார்வையில் இவளை திமிர்பிடித்தவள் என்று வைத் துக் கொள்ளுங்கள். என்ன? மற்றவளைப் பற்றி சொல்லவா? அவள் ஒரு அப்பாவி. எல்லாவற்றிக்கும் தலையாட்டிக் கொண்டு போகும் வெகுளி.

பாருங்கள் திமிர்பிடித்தவளும், அப்பாவியும் சேர்ந்திருக்கும் அந்த உறவு இறுதிவரை நிலைக்கும் என அவர்கள் நினைத்தார்கள். ஆனால் அதுதான் நடக்கவில்லை. வருடங்கள் ஓட ஓட இருவருக்குள்ளும் சிறு சிறு பிரச்சி னைகள் தோன்றிக் கொண்டிருந்தன. ஆனால் அவர்கள் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் தான் இன்று இருவருக்குள்ளும் இருந்த அந்த நட்பு இருந்த இடம் தெரியாமல் தொலைந்துவிட்டது.

பல்கலைக்கழகத்தின் இறுதி வரு டத்தில் படித்துக்கொண்டிருந்தபோது அவர்களது நட்பு முறிந்த கதையை சொல்லுகின்றேன் கேளுங்கள். எவரா லும் பிரிக்க முடியாத அவர்களுடைய நட்பை காதல் பிரித்தது. ஆம் காதல் தான். அப்பாவிப் பெண் என்று சொன் னேன் அல்லவா? அவள் இப்போது திமிர்பிடித்த பெண்ணாக தன் காதலுக்கு துணைபோகும் பெண்ணாக மாறி விட்டாள். திமிர் பிடித்த பெண் என்று சொன்னேன் அல்லவா? அவள் அப்பா விப் பெண்ணாக மாறிவிட்டாள். பாவம் எந்தநேரமும் அழுதுபுலம்பிக் கொண்டே இருந்தாள். தன்னோடு இருந்து ஒன்றாக படித்தவளை, தன் னோடு இருந்து ஒன்றாக விளையா டியவளை, தன்னோடு இருந்து சிரித் தவளை இழந்து தவித்தாள். அவளோ தன் காதலோடு ஐக்கியமாகி விட்டாள். என்னதான் அவள் இவளுக்கு ஆறுதல் சொன்னாலும்இவள் மனமோ கடந்த கால அவளைத்தான் தேடிக் கொண்டி ருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஞ்சரி 30 ஒரு பார்வை



ஓய்வு நிலைப் பேராசிரியரான இவர் ஆரம்ப காலத்தில் கவிஞராகவிருந்து பின்பு இலக்கியத்தின் பக்கம் தன் ஆய்வுக் கட்டுரைகள் மூலமாகவும் விமர்சனங்கள் மூலமாகவும்மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளார். மாதாமாதம் இவர் எழுதும் இப் பக்கத்திற்காக பலர் காத்திருப்பதும் மகிழ்ச்சிக்குரி யதாகும்

**பேராசிரியர்**
**செ. யோகராசா**

### கைவரிசை - ஷெல்லிதாசன்

கடந்த சில மாதங்கள் வரையும் இலங்கை மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுள் 'காஸ்' நெருக்கடி முக்கியமானது. எனினும் அது பற்றி தமிழில் வெளி வந்த சிறுகதைகள் மிகக்குறைவே இவ்விதத்தில் இச் சிறுகதையின் வரவு பாராட்டிற்குரியது.

### பொறிக்கிடங்கு - கு. குணறுபேஸ்

பாரம்பரிய விளையாட்டுக்கள் பற்றிய பதிவு என்ற விதத்தில் கவனத்திற்குரியது. எனினும் மேன்மேலும் செதுக்கப்படவேண்டியதவசியமானது!

### யாவும் கற்பனையல்ல - செங்கதிரோன்

பேய்கள் பற்றி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், நவம்(ஆரையம்பதி), ஏ. இக்பால் முதலானோர் எழுதிய சிறுகதைகள் சிலவற்றை நினைவுகூர்ந்து நோக்கும் போது இச்சிறுகதை எடுத்துரைப்புமுறை காரணமாக தனித்துவம் பெற்றிருப்பது தெரியவருகின்றது. வாசகர் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்துவதிலும் வெற்றி பெற்றுள்ளது.

### பெற்றால்தான் பிள்ளையா? - அகரா

'தத்தெடுத்து வளர்த்தல்' என்ற 'கரு' பழையது எழுதியவரும் பெண் படைப்பாளர் ஆகவே வாசகர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் மேலும் சிறப்பாக எழுதியிருக்க முடியும் என்றே கருதுகின்றேன்.

### மாயவிடம் - பிரசாந்தி ஜெயபாலன்

போதைப் பொருள் பாதிப்புப் பற்றிய வித்தியாசமான கரு. மேற்குறிப்பிட்ட சிறுகதை கரு எழுதப்பட்ட குறிப்பு இதற்குப் பொருந்துவதே!

### மேலதிகக் குறிப்புகள்

படிப்பும் பாதிப்பும் பற்றி அலெக்ஸ் பரந்தாமன் தொடர்ந்து எழுதுவது பயன்மிக்கது. வாசிப்புப் பற்றிய ஆசிரியத் தலையங்கம் வரவேற்பிற்குரியது. பல உயர் கல்வி நிறுவனங்கள் பாடசாலைகளின் ஆசிரியர்களுடன் பழகிவருபவரென்ற விதத்தில் சகோதர இனங்களைவிட தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் அருகிவரும் விடயங்களுள் வாசிப்பிற்கே முதலிடம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதை எழுதுவது எப்படி?

மு. தயாளன்

**ஒரு பரிதாபத்திற்குரிய பாத்திரத்தை எப்படி உருவாக்குவது?**

இத்தகைய பாத்திரங்களை உங்களின் அன்றாட வாழ்க்கையில் நீங்கள் சந்திப்பீர்கள். அப்படியான பாத்திரத்தை எப்படிக் கதையில் கொண்டு வருவது என்பதையே பார்க்கப் போகிறோம்.

முதலில் இப்படியன பாத்திரங்கள் என்ன வகையில் அடங்கியுள்ளன என்பதைப் பார்ப்போம்.

**1. வேலையிலிருந்து நிறுத்தப்பட்டவர்.**

**2. நம்பிக்கை இழந்த மனைவி**

**3. தீராநோய்**

மேற்கூறிய மூன்றும் ஒரு மனிதனை பரிதாபத்திற்குரியவனாக ஏற்படுத்து கின்றன.

இவற்றில் ஒன்றை நீங்கள் கதையின் நாயகனாகக் கொண்டால் அந்தப் பாத்திரம்பற்றி சிறிது விளக்கம் கொடுங்கள்.

உதாரணமாக கணவனால் கைவிடப்பட்ட பெண்ணாக இருந்தால் அவளின் பரிதாப நிலைக்கான காரணங்களைக் கண்டு பிடித்து அதனால் சமூகத்தில் உருவாகும் பிரச்சினைகளோடு கதையை நகர்த்தும்போது வாசகர்கள் விருப்பத்தோடு பயணிப்பார்கள். அவள் ஒருத்திமட்டுமே அவள் பிள்ளைக் கான பாதுகாவலாக இருந்தால் அவள் வேலையிலிருந்தும் சடுதியாக நிறுத்த வும்பட்டால் அவளின் நிலை என்னாகும்? இது வாசகர்களை உங்கள் வினாவுக்கு விடையளிக்கத் தூண்டும். பிரச்சினைகளைமட்டும் கூறுவதோடு நின்றுவிடாமல் அவள் எதிர் கொள்ளும் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி கதையை நகர்த்துங்கள். இதனை நீங்கள் இரண்டு வகையாகச் செய்யலாம். நீங்களே முடிவைக் கூறிவிடலாம் அல்லது வாசகரையே முடிவு கூறவைக்கும் வகையில் கதையை நகர்த்திச் செல்லலாம். முதலாவது முறையில் கவனமாக இருக்கவேண்டும். இது சில வேளை உங்களது கொள்கைப் பிரசாரமாகவும் அமைந்துவிடும். இந்தக் கருப் பொருளை கவனமாக அவதானித்து வாசிப் பவர்களில் யாரும் எழுத்தாளர்களாக இருந்தால் கதை ஒன்றை எழுதி அனுப்புங்கள்.

(இன்னும் வரும்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUXMI EDUCATION CENTRE

# LEC

## ENROLLING NOW
2022 / 2023

**REGISTER NOW**

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

WESTERN
JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

SPECIALISED IN 22ct GOLD, WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

SILK
EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org